விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-எட்டு+ பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 தை01 புதன்கிழமை (15.01.2003) தொலைபேசி- 2223378 ஒலி 27

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT



## நிரந்தர சமாதானத்திற்காக பேதமை கடந்து பாடுபடுவோம்

### இந்துமதத் தலைவர்கள் பொங்கல் செய்தி



(யாழ்ப்பாணம்)

இருபது வருட கால யுத்தம் தணிந்து சமாதான சூழ்நிலையில் கொண்டாடப்படும் இன்றைய தைப்பொங்கல் திருநாளில் நாட்டில் நிரந்தர சமாதானமும் சுபீட்சமும் ஏற்பட நாம் ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும்.

இவ்வாறு நல்லை ஆதன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஐ.மகேஸ்வரக்குருக்களும் தனித் தனியாக விடுத்த பொங்கல் செய்தியில் தெரிவிததுள்ளனர்.

இந்துமதத்தலைவர்கள விடுத்த இப் பொங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையை மேலும் வலுப்படுத்துவதற்கு இன,மத,மொழிகளுக்கு அப்பால் மனித நேயத்தின்

(08ம் பக்கம் பார்க்க)

### அதி உயர் பாதுகாப்பு வலயம்

# நம்பியாரின் ஆலோசனைக்கு பின்னரே மீள்குடியேற்றம்!

## கூட்டமைப்பு எம்பிக்களிடம் பிரதமர் ரணில் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**யாழ்.குடாநாட்டில் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக முன்னாள் இந்திய இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சதீஸ் நம்பியாரின் ஆலோசனை கிடைத்தவுடன் அது தொடர்பான நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கூட்டமைப்பு எம்.பிக்களிடம் உறுதியளித்துள்ளார்.**

யாழ்.குடாநாட்டில் உள்ள அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது,சற்ஸ்கோர் புள்ளித் திட்டத்தினால் யாழ்.பலகலைக் கழக அனுமதியில் பாதிப்புற்ற மாணவர்கள் தொடர்பான விடயங்கள் என்பன குறித்து தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு எம்பிக்கள் நேற்று முற்பகல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

அலரிமாளிகையில் இடம் பெற்ற இச்சநதிப்பின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அமைச்சர் பேராசி

(08ம் பக்கம் பார்க்க)

## புனரமைப்பு உபகுழுக்கூட்டம் இன்று கிளிநொச்சியில் ஆரம்பம்

### யப்பானிய உயர் மட்டக்குழுவும் பங்கேற்கும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இன்று ஆரம்பமாகவுள்ள புனரமைப்பு உப குழுக் கூட்டத்தில் யப்பானிய உயர் மட்டக குழு ஒன்று பங்கு பற்றவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்புக் குழுவின் தலைவர் சு.ப.தமிழ்ச்செல்வன்,அரச தரப்புக்குழுவின் தலைவர் பேணாட் குணதிலக ஆகியோர் தலைமையில் நடைபெறும். இக் கூட்டத்தில் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் கலந்து கொள்ளவுள்ளார்.

அதேவேளை நாளைய கூட்டத்தில் யப்பானிய வெளிவிவகார அமைசசர் ஐசூசிஅகாசி,உலக வங்கியின் ஆசியப் பிராந்தியத்திற்கான தலைவர் மிகோமிசூமிசு ஆகியோர் பங்கு பற்றவுள்ளனர்.இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் இவர்கள் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அரச சமாதானப் பணிப்பாளர் பேணாட் குணதிலக ஆகியோருடன் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

இதேவேளை மேற்படிப் புனரமைப்பு உபகுழுக் கூட்டத்தில் உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்திப்பது குறித்தும் ஆராயப்படவுள்ளது. (த)

## யாழ்-பல்கலையில் ராக்கிங் மாணவர்கள் கைகலப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் சூடு பிடித்திருக்கும் ராக்கிங் புதுமுக மாணவர்களின் மீது உடல்ரீதியாகவும் உள ரீதியாகவும் மோசமாகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் புது முகமாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு என்று குறிப்பிட்டு அவர்களைத் தனியறை ஒன்றுக்குள் அழைத்துச் சென்ற சிரேஷ்ட மாணவர்கள் மிகமோசமான வார்த் தைகளால் கிண்டலடித்ததாகவும் அங்க சேஷ்டைகளில் ஈடுபட்டதாகவும்

(08ம் பக்கம் பார்க்க)



பொங்கல் வாழ்த்துகள்

அன்பர்கள், ஆதரவாளர்கள், வர்த்தகப் பெருமக்கள், வாசகர்கள் அனைவருக்கும் எமது இனிய பொங்கல் வாழ்த்துகள்.

-வலம்புரிக் குடும்பம்-

### உயர் பாதுகாப்பு வலயத்தை ஆராய

## பொஸ்னிய இராணுவ நிபுணர் இம்மாதம் இலங்கை வருவார்

(கொழும்பு)

பொஸ்னிய நாட்டு இராணுவ நிபுணர் ஒருவர் இம் மாத இறுதிக்குள் இலங்கை வரவுள்ளார்.

அரசு,புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியமர்வுக்கு இணக்கம் காணப்பட்டுள்ள நிலையில்,உயர் பாதுகாப்பு வலயங்களை அப்புறப்படுத்துவது தொடர்பில் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலேயே பொஸ்னிய இராணுவ நிபுணர் இலங்கைக்கு வரவழைக்கப்படவுள்ளார்.

அதேவேளை கடந்த வாரம் தாய்லாந்து நாட்டு இராணுவத் தளபதி இலங்கைக்கு விஜயம் செய்து

(08ம் பக்கம் பார்க்க)

## நாவாந்துறையில் நேற்று ஊரடங்கு உத்தரவு

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறைப் பகுதியில் மீண்டும் வன்முறைகள் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் நேற்று மாலை 6 மணி முதல் இன்று அதிகாலை 4மணி வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலையம் அறிவித்துள்ளது.

உதைப்பந்தாட்ட ஆதரவாளர்களிடையே ஏற்பட்ட கோஷ்டி மோதல் பெரும் அடிதடி ரகளையாக மாறி நாவாந்துறைப் பகுதியில் பெரும் பதற்றமும் வன்முறையும் இடம் பெற்றது தெரிந்ததே.

இந் நிலைமை மேலும் தொடராமல்

(08ம் பக்கம் பார்க்க)

எல்லோருக்கும் எம் இனிய பொங்கல் வாழ்த்துகள்

| | | |
|---|---|---|
| ✱ தென்னாபிரிக்க உலகக் கிண்ணப் போட்டிதனை நேரிற் கண்டுஅனுபவிக்கும் அரியதோர் வாய்ப்பு | - | 01 |
| ✱ கலர் ரிவிகள் | - | 10 |
| ✱ மைக்றோ அடுப்புகள் | - | 05 |
| ✱ செல்லிடத் தொலைபேசிகள் | - | 30 |
| ✱ கசற் வானொலிப் பெட்டிகள் | - | 30 |
| ✱ பிரத்தியேக ஹீரோ ஹொண்டா கிறிக்கெட் மட்டைகள் | - | 100 |
| | | 176 |

26 பரிசுகள் வட பகுதியில் வெல்லப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
ஆகவே நீங்களும் முந்துங்கள்.ஜனவரி 31 இற்கு முன்




இரத்தின கோபால்ஸ்
ஆர். ஜி. பில்டிங்
65,கன்னாதிட்டி வீதி,யாழ்ப்பாணம்.
RG

மொத்தப் பரிசு 176
எதிர்பார்க்கப்படும் விற்பனை XXXXX

# தைப்பொங்கல் வாழ்த்துச் செய்திகள்

## ஒளி பிறக்கும் பொங்கல் நாள் அனைவருக்கும் மகிழ்வளிக்கட்டும்

### அமைச்சர் மகேஸ்வரன் வாழ்த்து

(யாழ்ப்பாணம்)



இருளகன்று ஒளி பிறக்கும் திருநாளாகிய இப்பொங்கல் திருநாள் அனைவருக்கும் மகிழ்வூட்டும் திருநாளாக அமையட்டும். இனங்களுக்கிடையே புரிந்துணர்வையும் ஐக்கியத்தையும் அளிக்கும் ஆண்டாக இவ்வாண்டு மலர வேண்டுமென்பதே நமது பிரார்த்தனையாகும்.

இவ்வாறு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் வெளியிட்ட பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தமிழர்கள் கடும் உழைப்பாளிகள். தொழிலின் பொலிவைக் கண்டு பூரிப்பவர்கள். சுதந்திரமாக, சுயமரியாதையுடன் வாழும் பண்பு படைத்தவர்கள். மனித வாழ்வுக்கு மூலமாக விளங்கும் சூரிய வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள். வேளாண்மையில் தாளாண்மை கண்டு உவகை எய்துபவர்கள். தமது உழைப்புக்கு உறுதுணையாக நிற்கும் எருதைப் போற்றிப் பொங்கலிட்டு மகிழ்பவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## மக்களின் அகத்திலும் முகத்திலும் மகிழ்ச்சியே பொங்கட்டும்

### -ஆனந்தசங்கரி எம்.பி. வாழ்த்து-



தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற எமது சான்றோரின் எண்ணத்திற்கேற்ப எம் மக்களின் மனத்திலும் முகத்திலும் மகிழ்ச்சியே பொங்கட்டும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி வெளியிட்ட பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தைப்பொங்கல் உழவர்களின் திருநாள். உழவர்கள் தாங்கள் பட்ட கஷ்டத்திற்கு பலன் கண்டு, அதை அயலவர்களுடன் பகிர்ந்து, தானும் மகிழ்ந்து, மற்றவர்களையும் மகிழ்வித்து, கூடிக் குலாவி உள்ளத்தில் உவகை பொங்க இருளை அகற்றி பகலவனை அழைத்துக் கொண்டாடும் ஒரு பெருநாள்.

எம் மக்கள் பட்ட துன்பங்கள் அனைத்தும் இருளோடு இருளாக மறையட்டும். ஒளி பிறக்கட்டும், எமது மக்களின் மனதில் சாந்தியும் சமாதானமும் மலரட்டும்.

ஒடுக்கு முறைகளும் அதிகாரப் போக்கும் மண்ணில் மறையட்டும். உயிரெல்லாம் ஒன்றே என்ற தத்துவத்தை உலகிற்குப் போதித்த எம் தமிழர்களின் வாழ்வு வளம் பெறட்டும்.

யாருக்கும் யாரும் எஜமானாக இல்லாமல் அன்பு, கருணை, ஜீவகாருண்யம் ஆகிய உயர்ந்த மனித விழுமியங்கள் பிரகாசமாகட்டும். உழவனின் வாழ்வியல் பண்பே உலகத்தின் பண்பாக நிறையட்டும்.

இரண்டு தசாப்த கால இருண்ட வாழ்வில் இருந்து விடுபட்டு, 2003ம் ஆண்டின் பொங்கல் திருநாள் தமிழர்களின் வாழ்வில் சுபீட்சமும் சாந்தியும் பெற்று ஒளிமயமான வாழ்வை ஆரம்பிக்க வேண்டுமென இந் நன்நாளில் எல்லாம் வல்ல இறைவனை வணங்கிப் பிரார்த்திக்கின்றேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## வெற்றிகளை அறுவடை செய்யும் தினமாக பொங்கல் நாள் அமையட்டும்!

### -டக்ளஸ் வாழ்த்துச் செய்தி-



தைப்பொங்கல் திருநாள் என்பது தமிழர்களின் பெருநாள் மட்டுமல்ல. அது உழுதுண்டு வாழும் உழைப்பவர்கள் தமது மகிழ்ச்சிகரமான அறுவடைக்காக நன்றி தெரிவிக்கும் நன்நாள்.

இவ்வாறு யாழ்.மாவட்ட எம்.பியும், ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா நேற்று வெளியிட்டுள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

புத்தரிசி கொண்டு பொங்கல் செய்து கதிரவனுக்கு காணிக்கை செய்யும் நாள். எனவே இதனை ஒரு மாதத்தின் முதல் நாளாக மட்டும் கருதிக் கொள்ளமுடியாது. அதனாலேயே தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கை நம்மவர்களிடையே ஆழமாக வேரூன்றியுள்ளது,

தற்போது பல் வேறு வழிகளில் நிச்சயமின்மைகளும், அடுத்து என்ன ஆகுமோ என்ற சந்தேகங்களும் மீண்டும் நெருக்கடிகள் தோன்றிவிடுமோ என்ற அச்சங்களும், எமது மக்கள் மத்தியில் மேலோங்கியுள்ளது இரகசியமானதல்ல. எனினும் தெளிவான சிந்தனைகளின் அடிப்படையில் பிறக்கும் உறுதியான நம்பிக்கைகளும, செயலாக்கும் வகையிலான முயற்சிகளும் வெற்றிபெறும். ஆதலால் உறுதியான நம்பிக்கைகளை விதைத்து வெற்றிகளை அறுவடை செய்வதற்கான தினமாக தைப்பொங்கல் திருநாள் விளங்கட்டும். இத் தைப்பொங்கல் நன்நாளின் மகிழ்ச்சி எந்நாளும் நீடிக்கட்டும். பொங்கும் மங்களம் எங்கும் தங்கட்டுமென வாழ்த்துகின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார். (இ)

## அமெரிக்கா யுத்தம் தொடுத்தால்.....

## பல இலட்சம் ஈராக்கியர் பாதிக்கப்படும் அபாயம்

(நியுயோர்க்)

ஈராக் மீது யுத்தம் ஆரம்பிக்கப்பட்டால் 5 இலட்சம் ஈராக்கியர்கள் ஆரம்பத்திலேயே பாதிக்கப்படுவார்களென ஐக்கிய நாடுகளின் அவசர நிலைகள் தொடர்பாகத் திட்டங்களை தயாரிப்பவர்கள் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் திட்டப்படி ஈராக் மீது தொடுக்கப்படவுள்ள யுத்தமானது 1991 இல் இடம் பெற்ற வளைகுடா யுத்தம் போன்று இல்லாமல் அதனைவிட பாரிய அழிவுகள் ஏற்படுத்தக் கூடியது என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, போர் தொடங்கும் பட்சத்தில் 20 இலட்சம் பேர் இடம் பெயர்வுக்குள்ளாகுவார்களென்றும், 95இலட்சம் பேருக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் என்றும் ஐக்கிய நாடுகள் சபை மதிப்பீடுசெய்துள்ளது. (உ-2)

## அமெரிக்கப் படைகளுக்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட்டத்திற்கு முஸ்தீபு

(சியோல்)

தென்கொரியாவில் இருக்கின்ற அமெரிக்க இராணுவம் வெளியேற வேண்டுமெனக் கோரித் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப் போவதாக தென்கொரிய மக்கள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக இதுவரை 39 எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ள போதும் எந்த நடவடிக்கையினையும் அமெரிக்கா எடுக்கவிலலை.

இதனால் பாரிய ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை தலைநகர் சியோலிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன்பாக நடத்தப்பொதுமக்கள் தீர்மானித்துள்ளனர்.

இதேவேளை, அண்மையில் தென்கொரியாவில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி ரோமோ ஹோன் தனது நாட்டின் இறைமைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் அங்கு நிலை கொண்டிருக்கும் அமெரிக்கப்படைகள் வெளியேற்றப்பட வேண்டுமென அமெரிக்காவுக்குக் கோரிக்கை விடுத்திருந்தமை தெரிந்ததே. (உ-2)

## பிஜியில் சூறாவளி

(சுவா)

பிஜியில்வீசிய கடும் சூறாவளியினால் இரண்டு சிறுவர்கள் உயிரிழந்துள்ளதுடன், பலர் அகதிகளாக ஆலயங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். அங்கு மணித்தியாலத்திற்கு 150 கிலோமீற்றர் வேகத்தில்காற்றுவீசுவதாகவும் இது இன்னும் சில தினங்களுக்கு நீடிக்கும் என்பதால் சேதங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளதாகவும் வானியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (உ-2)

## மகாராஷ்டிர முதல்வர் பதவி விலகினார்

(புதுடில்லி)

இந்திய மகாராஷ்டிர மாநிலத்தின் முதலமைச்சர் உதேஷ் முவந் நேற்றுத் திடீரென்று பதவி விலகியுள்ளார்.

மாநிலங்களவைத் தேர்தல் நடைபெறுவதற்கு முன் மகாராஷ்டிர உட்படச் சில மாநிலங்களை ஒன்றிணைக்க நடவடிக்கை எடுக்கப் போவதாக காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி விடுத்த அறிவிப்பையடுத்தே உதேஷ் முவந் பதவி விலகியுள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் சோனியா காந்திக்கும் உதேஷ் முவந்திற்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே சோனியா காந்தி மாநிலங்களை இணைப்பது தொடர்பான இந்த அறிவிப்பை விடுத்துள்ளாரெனவும் இது தொடர்பாக காங்கிரஸ் கட்சி மூத்த உறுப்பினர் ஒருவருடன் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்தெனவும் தெரிய வந்துள்ளது. (உ-2)

## அமெ.விமானங்கள் ஈராக்மீது தாக்கு

(பாக்தாத்)

அமெரிக்கா, மற்றும் பிரித்தானியாவின் விமானங்கள்நேற்று ஈராக்கில் நடத்திய தாக்குதலில் 6 ஈராக்கியர்கள் காயமடைந்துள்ளனர். ஈராக்கில்தடை விதிக்கப்பட்ட வான் பரப்பில் வைத்தே இந்த விமானங்கள் தாக்குதலை நடாத்தியுள்ளதாக ஈராக்தகவல்கள் தெரிவித்துள்ளன. (உ-2)

## ஆப்கானுக்கு அனுமதி

(காபூல்)

சர்வதேசகுற்றவியல் நீதி மன்றததுடன் ஆப்கானிஸ்தான் இணைந்துள்ளது. இதற்கான அனுமதியினை ஆப்கானிஸ்தான் அமைச்சரவை நேற்று வழங்கியுள்ளதாக ஆப்கானிஸ்தான் ஜனாதிபதியின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இதற்கமைய கிரிமினல்குற்றங்களையும் ஆப்கானஸ்தான் நாட்டவர் சர்வதேச நீதி மன்றத்தின் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட வழியேற்பட்டுள்ளது. (உ-2)

## கிளர்ச்சியாளர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படும்

(அபிட்ஜான்)

ஐவரிக்கோஸ்டில் கிளர்ச்சியாளர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்போவதாக அந் நாட்டின் ஜனாதிபதி லோறன்ஸ்ரொபேக்கோ தெரிவித்துள்ளார்.

பாரிஸில் இடம் பெறவுள்ள சமாதானப் பேச்சுக்களுக்கு முன்னரே இந்தப் பொது மன்னிப்பு வழங்கப்படும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

ஐவரிக்கோஸ்ட் அரசாங்கமும், கிளர்ச்சிவாதிகளும் சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதையடுத்தே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. (உ-2)

## கிர்கிஸ்தானில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த தீர்மானம்

(பிஷ்கெக்)

கிர்கிஸ்தானில் சர்வஜன வாக்கெடுப்பினை நடத்த அந்த நாட்டின் ஜனாதிபதி அஸ்ரர் அடேகேவ் தீர்மானித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் அவரைப்பதவியிலிருந்து விலகுமாறு கோரியதையடுத்தே இவ்வாக்கெடுப்பு தீர்மானத்தை எடுத்துள்ளார்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள இந்த சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் பாராளுமன்றத்திற்குப் புதிய அதிகாரங்கள் வழங்கப்படலாமெனவும் ராய்டர் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (உ-2)

## தீவிரவாதிகள் தாக்கியதில் 12 பொது மக்கள் பலி

(புஜீம்புரா)

புருண்டியில் தீவிரவாதிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் 12 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

புருண்டியின் தலைநகரான புஜீம்புராவிலிருந்து சென்ற வாகனங்கள் மீது தீவிரவாதிகள் மறைந்திருந்து தாக்குதலை நடத்தியுள்ளனர்.

உரிமை கோரிப் போராட்டம் நடத்தும் தீவிரவாதக் குழு ஒன்றே இத்தாக்குதலை நடத்தியுள்ளது என்று புருண்டியின் அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ-2)

## வடகொரியாவுக்கு எரிபொருள்வழங்க அமெரிக்கா நிபந்தனை விதிப்பு

(வாஷிங்டன்)

அணு உற்பத்தியை வடகொரியா கைவிடுமானால்அந்த நாட்டுக்கு எரிபொருள் உதவிவழங்கத் தாங்கள் தயாராக விருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. தென்கொரியாவுக்குச் சென்றுள்ள அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலர் ஜேம்ஸ்ஹெலியே இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

கொரியத்தீபகற்பத்தில் தற்போது எழுந்துள்ள பதற்ற நிலையைத் தவிர்க்கும் வகையில் இந்த அறிவிப்பை தான் விடுத்துள்ள்தாக ஜேம்ஸ் ஹெலிமேலும் கூறியுள்ளார். இவரது இந்த அறிவிப்பினையடுத்து அமெரிக்கா தம்மீது பொருளாதாரகத் தடையினை விதிக்க முயலுவதாகவும் அவ்வாறுவிதித்தால் அதற்கு தகுந்த பதிலடி கொடுப்போம் என்று வட கொரியா எச்சரித்துள்ளது.

இதனிடையே தற்போது வட கொரியாவில் நிலவும் பதற்றத்திற்கு அமெரிக்காவே முக்கிய காரணம் என்று வடகொரியாவின் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி குற்றஞ் சாட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-2)

## மிலோசவிற்கு கடும் சுகவீனம் குற்றவியல் விசாரணை இடைநிறுத்தம்

(பெல்கிரேட்)

யூகோஸ்லாவிய முன்னாள் ஜனாதிபதி மிலோசவிற்கு ஏற்பட்டுள்ள கடும் சுகவீனத்தால் அவர் மீதான குற்றவியல் விசாரணைகள் இடைநிறுததப்பட்டுள்ளன.

யூகோஸ்லாவிய ஜனாதிபதியாக இவர் இருந்த போது அங்கு இடம்பெற்ற படுகொலைகள் வன்முறைகள் தொடர்பாக இவர் மீது கடுமையான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தது.

இவை தொடர்பில் சர்வதேச நீதிமன்றம் கட்டம்கட்டமாக இவர் மீது விசாரணைகளை மேற்கொண்டு வந்தது.

இதனை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக நீதிமன்றில் ஆஜராகும்படி அழைப்பு விடுக்கப்பட்ட போது கடும் சுகவீன மடைந்துள்ளாரெனநீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து விசாரணைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகச் சர்வதேச நீதிமன்றின் நீதிபதி ரிச்சர்ட்மீர் தெரிவித்துள்ளார். (உ-2)

## குண்டுகளால் ஏற்பட்ட குழிகள் மூடப்பட்டன

(தும்பளை)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் யுத்த விமானங்கள் வீசிய குண்டுகளால் ஏற்பட்ட பாரிய குழிகள் வெளிநாட்டில்வதியும் இவ்வூரவரொருவரின் நிதியுதவியுடன் மூடப்பட்டுள்ளன

மேற்படி குழிகளுக்குள் தேங்கும் நீர் நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவாக அமைவதை இப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சுட்டிக்காட்டியதையடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (உ-245)

## வெள்ளியன்று பல்கலையில் பொங்குதமிழ் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பொங்கு தமிழ் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் வடக்கு-கிழக்கு, தமிழ் மக்களின் தாயகம் என்பதை வலியுறுத்தி பொங்கு தமிழ் பிரகடனம் வெளியிடப்படவிருக்கின்றது.

மேற்படி பொங்கு தமிழ் நிகழ்வு குறித்த விழிப்புணர்வை பொதுமக்கள் மதியில் ஏற்படுத்தும் முயற்சியில் ஏற்பாட்டாளர்கள் ஈடுபட்டுவருகின்றனர். (உ)

சிவராத்திரி விழா தொடர்பாக

## இந்து கலாசார அமைச்சு ஏற்பாட்டில் மாநாடு

(அரியாலை)

எதிர்வரும் மகா சிவராத்திரி, தினத்தை திருக்கேதீஸ்வரத் திருத்தலத்தில் சிறப்பாகக் கொண்டாடுவது குறித்தும், யாழ் குடாநாட்டு மக்கள் பூநகரி கேரதீவு- சங்குப்பிட்டி வழியாக மாந்தைக்கு பயணம் செய்வது தொடர்பாகவும் உயர் மட்ட மாநாடு ஒன்றைக் கூட்ட இருப்பதாக இந்து கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர்திரு க.பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இம் மாநாட்டில் தள்ளாடி மற்றும் திருக்கேதீஸ்வர ஆலயச் சூழலில் உள்ள இராணுவம் வெளியேறுவது தொடர்பாக ஆராயப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

எதிர் வரும் யூன் மாதம் 14 ஆம் திகதி திருக்கேதீஸ்வர மகாகும்பாபிஷேகம் நடைபெற இருப்பதாக பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார். (உ-225)

## மந்திகை ஆஸ்பத்திரியில் மருந்துக்கு தட்டுப்பாடு

(தும்பளை)

மந்திகை மருத்துவமனையில் மருந்துவகைகளுக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம் மருத்துவ மனைக்கு ஒதுக்கப்படுகின்ற மருந்துவகைகளுக்கும் அங்கு சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர் தொகைக்கும் இடையில் காணப்படும் வேறுபாடே இந்நிலை ஏற்படக் காரணமாக அமைவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனால் இங்கு சிகிச்சை பெறச் செல்வோர் மருந்துகளைப் பெறத் தனியார் மருந்துக் கடைகளை நாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது (உ-245)

## நிதி முகாமைத்துவ சீராக்கல் நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்க நிறுவனங்களின் நிதிமுகாமைத்துவத்தைச் சீராக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக திறைசேரிசெயலாளர் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் இந்த நிறுவனங்கள் கணக்கு வழக்குகளையும், வருடாந்த அறிக்கைகளையும் குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் அரசாங்க கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என கேட்டுள்ளார்.

முன்னைய ஆட்சிக் காலத்தில் சீரான நிதிமுகாமைத்துவம் இல்லாத காரணத்தினால் பல மோசடிகள் நடந்தன.

இது தொடர்பாகநிதித்துறை சார் நடவடிக்கைகளை கடுமையாக்க வேண்டியிருக்கிறது என்று திறைசேரி செயலாளர் தெரிவித்தார். (உ-10)

## கட்டுப்பாட்டை இழந்தவான் கடைகளுக்குள் பாய்ந்தது

(கொக்குவில்)

பயணிகளுடன் வேகமாக வந்த சிற்றூர்தி கட்டுப்பாட்டை இழந்து கடைகளுக்குள்பாய்ந்தது.

நேற்று முன்தினம் நண்பகல்அளவில் இடம்பெற்ற இந்தச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்த தயாபரன் என்பவருக்குச் சொந்தமான சிற்றூர்தி வங்களாவடிச் சந்திப் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்து அப்பகுதிக் கடைகளுக்குள் புகுந்ததுடன் அருகில் இருந்த மின்கம்பத்துடன் மோதியது.

இதனால் மூன்று கடைகளின் முன்பாக வைக்கப்பட்டிருந்த பொருட்கள் சேதமடைந்ததுடன் அங்கு நிறுத்தப்பட்டிருந்த ஆறு சைக்கிள்களும் அருகிலிருந்த மின் கம்பங்களும் பெரும் சேதமடைந்தன.

இச்சம்பவத்தின் போது பயணிகளுக்கு சிறு சிறு காயங்களே ஏற்பட்டதுடன் சிற்றூர்தியின் முன்பக்கம்பலத்த சேதத்திற்குள்ளானது.

சம்பவ இடத்திற்கு உடன் விரைந்த காவலூர் பொலிஸார் இது குறித்த விசாரணைகளையும் மதிப்பீடுகளையும் மேற்கொண்டனர். (உ-243)

# வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆட்சேபம் தெரிவித்து ஆர்ப்பாட்டம்

## மக்கள் விடுதலை முன்னணி ஏற்பாட்டில்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் ஆட்சிக் காலத்தில் வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துள்ளமைக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் முகமாக மக்கள் விடுதலை முன்னணி தொடர் ஆர்ப்பாட்டங்களை நடத்த முயன்று வருகிறது

இதற்கமைய எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமையன்று கொழும்பு உட்பட முக்கிய நகரங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தப் போவதாக மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜிதஹேரத் தெரிவித்துள்ளார்.

இவ் ஆர்ப்பாட்டங்களுக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி சிஹல உறுமய போன்ற கட்சிகளின் உதவிகளைப் பெறப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கும் தனியார் மயமாக்கல் கொள்கைக்கும் எதிராக கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் மக்கள்விடுதலை முன்னணி ஆர்ப்பாட்டம் நடத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## சமாதானத்தைவலியுறுத்தி கையெழுத்து வேட்டை

(மட்டக்களப்பு)

தற்போது முன்னெடுக்கப் பட்டுவரும் சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்து சுமார் ஒருலட்சம் பேரின் கையெழுத்துக்களை திரட்டும் நடவடிக்கையில் மட்டக்களப்பு, மற்றும் அம்பாறைமாவட்ட பாடசாலை மாணவர்கள் இறங்கியுள்ளனர்.

சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் அதற்கு தமதுபூரண ஆதரவை வழங்கவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ள கையெழுத்துக்களுடன் கூடிய தான இம்மகஜரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனிற்கும் அனுப்பிவைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (உ-10)

## நால்வர் விடுதலை

(உடுவில்)

கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு யாழ் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதிகள் நால்வருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுவிடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நால்வரும்நேற்று முன்தினம் இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர். (உ-26)

## போயா ஆன்மீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவாநிலையததில்எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

ஓம்காரம், காயத்திரிமந்திர ஜெபம், பஜனை, சொற்பொழிவு ஆகியன இதில் அடங்கும். (உ)

## ஆயுதக் கிடங்கு விவகாரம் இராணுவ அதிகாரிகளின் வாக்குமூலம் பெறுகை

(கொழும்பு)

அத்துருகிரிய மிலேனியம் சிற்றி ஆயுதக் கிடங்கு தொடர்பாக இராணுவ அதிகாரிகளிடம் இருந்து வாக்குமூலங்கள் பெறப்பட்டு வருகின்றன.

இந்தவகையில் ஜனாதிபதி ஆலோசனை ஆணைக்குழுவினால் இதுவரை 7 அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ் ஆயுதக்கிடங்கு தொடர்பான விசாரணைகளை நடத்திய உளவுப்பிரிவின் அதிகாரிகளும் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

அத்துடன், இவ் விசாரணைகளை பொறுப்பேற்று நடத்

(6ம் பக்கம் பார்க்க)

## மாவிட்டபுரத்தில் தைப்பூசத்திருவிழா

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தைப்பூசத் திருநாளை சிறப்பாக நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பக்தர்கள் வாகனங்களில் ஆலயத்திற்குவந்து செல்லலாம் எனவும் தெல்லிப்பழை சோதனைச்சாவடியிலிருந்து கோவிலுக்கு வந்துசெல்ல வான்ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## மீன்பிடியியல் டிப்ளோமா 20 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறி (2002/2003) கல்வியாண்டு எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையால். ஆரம்பித்து வைக்கப் படவுள்ளது.

இந்நெறிக்கு தெரிவாகி பதிவு மேற்கொண்ட அனைத்து மாணவர்களையும் தவறாது அன்று காலை 8.30 மணிக்கு பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ)

## பருவ இராகங்கள் இன்னிசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். விழிப்புலனற்றோர் சங்க வளர்ச்சி நிதிக்காக சங்கக் கலைஞர்கள் படைத்தளிக்கும் பருவ இராகங்கள் இன்னிசை நிகழ்ச்சிகள் இன்று மு ப. 10 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை நகர மண்டபத்திலும் பி. ப. 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கிலும் இடம்பெறவுள்ளது. (உ)

## மாணவர் போட்டிகளுக்கு விண்ணப்ப திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அமைச்சினால் எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி தொடக்கம் 5ஆம் திகதி வரை கொழும்பில் நடத்தப்படவுள்ள உலக இந்து மாநாட்டின் ஒரங்கமானபாடசாலை மாணவர்களுக்கான பேச்சு, கட்டுரை, பண்ணிசை ஆகிய போட்டிகளுக்கானவிண்ணப்ப முடிவு தினம் இம்மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப் பட்டுள்ளது.

கீழ்ப்பிரிவு (6,7,8 ஆம் ஆண்டுகள்) மத்திய பிரிவு (9,10,11 ஆம் ஆண்டுகள்), மேற்பிரிவு (12,13ஆம்ஆண்டுகள்) ஆகிய மூன்று பிரிவுகளிலும், கட்டுரை, பேச்சு, பண்ணிசை ஆகிய மூன்று போட்டிகள் நடைபெறவுள்ளன. பாடசாலை அதிபர்கள், தத்தம் பாடசாலைகளில் பயிலும் மாணவர்களை இப் போட்டிகளிற் பங்குபெற ஊக்குவிக்குமாறும்,

போட்டிதொடர்பான விண்ணப்பப் படிவங்களை பேராசிரியர் சி. பத்மநாதன் செயலாளர் நாயகம் உலக இந்து மாநாடு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு 248, 2/1, காலி வீதி கொழும்பு04, என்னும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளுமாறும் மாநாட்டுச்செயலகம் அறிவித்துள்ளது. (உ)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இந்துசமயப் பேரவையால் புனரமைக்கப்பட்ட கைதடி சைவச் சிறுவர் இல்லத்திறப்பு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கடந்த கால போர்கள் காரணமாக இச் சைவச் சிறுவர் இல்லம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (உ)

## ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் யாழ்-கொழும்பு விமான சேவை நடத்த திட்டம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான விமான சேவையை நடத்துவதற்கு ஸ்ரீலங்கன் எயர் லைன்ஸ் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அத்துடன், பலாலி விமானத் தளத்தை அபிவிருத்தி செய்வது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. (உ-8)

# இன்று ஒரு தகவல்

## மௌனம் ஒரு தொண்டு

இந்தக் காலத்துப் பிள்ளை ஒருவன் தன்னுடைய அப்பாவைப் பார்த்து ''அப்பா.... நான் உனக்கு உதவி செய்யலாம் என்று நினைக்கின்றேன். என்ன உதவி செய்ய வேண்டும் என்று சொல்!'' என்று சொன்னான். ''நீ சும்மா இருந்தால் அதுவே எனக்குச் செய்கிற பெரிய உதவியாக இருக்கும்'' என்றார் அப்பா. சும்மா இருப்பதும் ஒரு உதவி தான்! அதே மாதிரி மௌனமும் ஒரு சமூகசேவை தான் என்கிறார் காஞ்சிப் பெரியவர். நமக்கு மெய், வாய், கண், மூக்கு, செவி என ஐந்து புலன்கள் இருக்கின்றன. இந்த ஐந்திலும் அதிகப்படியான வேலை எதற்கென்று நினைக்கிறீர் கள்? வாய்க்குத் தான். ஏனெனில் அதற்கு இரண்டு வேலைகள்.

கண்ணுக்குப் பார்ப்பது மட்டும் தான் வேலை. காதுக்கு கேட்பது மட்டும்தான். மூக்குக்கு வாசனையை அறிவது. உடம்புக்கு உணர்வது மட்டும் தான் வேலை. ஆனால் வாய் அப்படி இல்லை. அதற்கு இரண்டு வேலை! சாப்பிடுவதும் அது தான். பேசுவதும் அதுதான். அதாவது வாய் ஒன்றுதான். கமர்மேந்திரியமாகவும் இருக்கிறது. ஞானேந்திரியமாகவும் இருக்கிறது. சாப்பாட்டில் உட்கார்ந்தால் எந்தெந்த ஆகாரம் என்னென்ன ருசியென்று அறிவிக்கிற வேலையையும் செய்கிறது. சபையில் உட்கார்ந்தால் பாடுவது, பேசுவது, சிரிப்பது போன்ற வேல்லைகளையும் செய்கிறது.

இன்னொரு வித்தியாசம் கண், காது, மூக்கு என்பனகளைப் படைந்து வேலை செய்வதில்லை. ஒரு ரோஜாப்பூவைப் பார்த்தால் உடனே மூக்கு அப்படியும் இப்படியும் அசைய ஆரம்பிப்ப தில்லை. ஒரு சங்கீதத்தைக் கேட்டவுடனே காது ஆட ஆரம்பிக்காது. ஆனால் வாய் அப்படியில்லை. அது பேசி .னாலும் சரி, சாப்பிட்டாலும் சரி அசைந்து தான் ஆகவேண்டும். ஆகவே மற்றவைகளை விட வாய்க்கு வேலை அதிகம் என்று தெரிகிறது. சாப்பிடுவது, பேசுவது என்று இரண்டு காரியங்கள் அதற்கு. இப்படி இரண்டு காரியங்கள் இருப்பதனால் அவை இரண்டையும் பாதியாகக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்பது கடவுளுடைய அபிப்பிராயமாக இருக்கவேண்டும் என்கிறார காஞ்சிப் பெரியவர்.

ஆனால் இப்பொழுது நாம் அப்படியா நடந்துகொள்கிறோம்? அதற்கு நேர்மாறாக நடந்து கொள்கிறோம். நாம் சாப்பிடுவதும் அதிகம்! பேசுவதும் அதிகம். இரண்டு வேலைகளையும் தேவைக்கு அதிகமாகவே செய்கிறோம். வாய் தான் மிகவும் மேலதிக வேலை செய்கிறது. அதற்கு ஓய்வு கொடுத்தால் உடம்பும் நன்றாக இருக்கும் உலகமும் நன்றாக இருக்கும். மௌன விரதம் இருப்பதெல்லாம் எதற்காகவென்று நினைக்கின்றீர்கள்? இதற்காகத்தான்.

இந்தக் காலத்தில் மௌனமாக இருக்கிறவர்கள் எல்லோரும் மகத்தான தொண்டு செய்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். சத்தம் அதிகமாகப் போய்த்தான் **Sownd Pollwtion** வருகிறது. அது மட்டுமில்லை.... மௌனமாக இருந்தால் சண்டை சச்சரவே வராது. மௌனம் கலக நாஸ்தி! ஆகவே இதுவும் ஒரு சமூக சேவைதான். நமக்குத்தான் வாய் இருக்கிறதே என்பதற்காக வசமாகச் சாப்பிடுவதும் தப்பு. வளவளவென்று பேசுவதும் தப்பு!

''ஒரு கருத்தைச் சொல்வதற்கு ஒரேஒரு சொல் போதும் என்று இருக்கும் போது, இரண்டு சொற்களைச் செலவு செய்யாதே! எவ்வளவு சொன்னாலும் அதனால் எந்த ஒரு பயனும் விளையாது என்று தெரியவருமேயானால் அந்த ஒரு சொல்லையும் விரயம் செய்யாதே!'' என்கிறார் சிங்செள என்கின்ற அறிஞர். எல்லாக் குணங்களிலும் மௌனந்தான் சிறந்தது என்கிறார் ஜீனோ. மௌனமாக இருப்பதன் மூலம் மற்றவர்களின் குறைகளை நம்மால் தெரிந்து கொள்ள முடியும். அதே சமயத்தில் நம்மிடமிருக்கின்ற குறைகளை மற்றவர்க்ளுக்குத் தெரியாமல் மறைத்துக் கொள்ளவும் முடியும் என்கிறார் அவர். அது உண்மை தானே!

ஒரு பெரிய மேடையில் பேச்சாளர் பொது வாழ்வில் 25 வருஷ காலமாக ஈடுபட்டிருக்கிறவர். அவரின் மனைவி ஒரு நாள் ''எங்கள் வீட்டுக்காரர் 25 வருஷ காலமாகப் பொது வாழ்வில் ஈடுபட்டிருந்தால் கூட இந்தமாதம் 10ஆம் திகதியிலிருந்துதான் மக்களுக்குச் சேவை செய்ய ஆரம்பித்திருக்கிறார்'' என்று மிகவும் பெருமையாகச் சொன்னார். ''10 ஆம் திகதிக்கு அப்படி என்ன விசேஷம்?'' என்று கேட்டேன். ''அன்றிலிருந்து தான் அவர் மேடையில் பேசுவதை நிறுத்தினார்'' என்றார் அந்த அம்மா.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்.*

## மீளக்குடியமர்ந்தோர் விடயத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் பாராமுகம்

(தென்மராட்சி)

ஏ.9 பாதை திறக்கப்பட்டதன் பின் வன்னியில் இருந்து குடாநாட்டுக்கு மீளக் குடியமர வருகை தந்துள்ள 25ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களில் 4ஆயிரத்து 857குடும்பங்களுக்கு மட்டுமே சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் உணவு அல்லாத உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இப்பொருள் உதவிகளைச் சிறுவர் பாதுகாப்பு நிதியம் பட்டினிக்கு எதிரான நிறுவனம், மற்றும் யு.என்.எச்.சி.ஆர் ஆகியன வழங்கியுள்ளன.

சிறுவர் பாதுகாப்பு நிதியம் சங்கானை, சண்டிலிப்பாய் தெல்லிபபழை, தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுகளில் மொத்தமாக 2ஆயிரத்து 689குடும்பங்களக்கும் பட்டினிக்கு எதிரான நிறுனம் சங்கானை, தெல்லிப்பழை, உடுவில், கோப்பாய் ஆகிய இடங்களில் ஆயிரத்து 326குடும்பங்களுக்கு யு.என்.எச்.சீ.ஆர். உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 836குடும்பங்களுக்கும் தமது உதவிகளை வழங்கியுள்ளன.

ஆயினும், நல்லூர், பருத்தித்துறை, கரவெட்டி, வேலணை, ஊர்காவற்றுறை போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளில் வன்னியில் இருந்து மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு எந்தவொரு அமைப்பினதும் உதவிகள் இது வரை வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இது இவ்விதமிருக்க, வன்னியில் இருந்து குடா நாட்டில் மீளக்குடியமர்ந்துள்ள மொத்தக் குடும்பங்களில் 75சதவீதமான குடும்பங்கள் எவ்விதமான அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவித்திட்டங்களும் உட்படுத்தப்படாமை குறித்து அக்குடும்பங்கள் பெரும் அதிருப்தி அடைந்துள்ளன.

அதேவேளை, மீளக்குடியமர்ந்துள்ள இக் குடும்பங்களுக்கான மீளக்குடியமர்வு கொடுப்பனவும் வழங்கப்படவில்லை. இதனால் இக் குடும் பங்கள் பல்வேறு விதமான நடைமுறைக் கஷ்டங்களை எதிர் நோக்கி வருகின்றன. (உ-77)

### சமாதானக் குழுக்களின் பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்-மனித முன்னேற்றநடு நிலையத்தின் புலவர், அட்டகிரி, தேவர்கட்டு சாமாதனக்குழுக்கள் இணைந்து நடாத்தும் வருடாந்த பொங்கல்விழா இன்று மு.ப 10.00 மணிக்கு புலவர் குடியிருப்பில் நடை பெறவுள்ளது. இதில் சமாதன இணைப்பாளர், ஊக்குவிப்பாளர், மற்றும் சமாதானக்குழு அங்கத்தவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இத்தகைய நிகழ்வு ஒன்று எதிர் வரும் 17ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு கொக்குவில் சமாதானக்குழு இளையோர்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(உ-6)

## சர்வதேச ரீதியில் நிலைபெற ராஜதந்திர உறவுகள்அவசியம்

### மிலிந்தமொற கொட வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை சர்வதேசிய ரீதியில் பெயர் பெறுவதற்கு ஏனைய நாடுகளுடனான இராஜதந்திர உறவுகளும் உதவக்கூடும் என விஞ்ஞான தொழில் நுட்பஅமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார். பண்டர நாயக்க சர்வதேச ராஜதந்திர உறவுகள் தொடர்பான பயிற்சி நறுவனத்தின் விருதுகள் வழங்கும் வைபவத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மிலிந்த மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.இந் நிகழ்வில் அமைச்சர் தொடர்ந்தும் பேசுகையில், சமாதான முயற்சிகள் முக்கியமான கட்டத்தை அடைந்துள்ளன. இதுபோன்ற சமயத்தில் ராயதந்திர உறவுகளை வளர்ப்பது சம்மந்தமான பயிற்சிகள் முக்கியமானது என்று குறிப்பிட்டார். அதேவேளை இந்த நிகழ்வு பற்றி செய்தி சேகரிக் கச் சென்ற ஊடகவியலாளர்கள் பல சிரமத்தின் மத்தியிலேயே செய்திகளை சேகரித்தனர் என்றும் அவர்களை உள்ளே அனுமதித்து உரிய முறையில் நிகழ்வை கவனிக்க



கூடிய ஏற்பாடுகள் ஏதுவும் செய்யவில்லை என்றும் நிகழ்விற்குச் சென்று திரும்பிய செய்தியாளர் ஒருவர் கவலை தெரிவித்துள்ளார்.(உ-8,10)

### இராசி பலன்

**15. 01. 2003**

**(தை 1, புதன்)**
**துவாதசி பி.ப 4.01 வரை**
**ரோகிணி பி.ப 1.07 வரை**
**இராகுகாலம் 12.34 - 2.04**
**சுபநேரம் - 5.04 - 6.34**
**தைப்பொங்கல்**

**மேடம்**
புதிய திருப்பம், தேவையற்ற விவாதம், தனவிரயம், காரிய தாமதம்.

**இடபம்**
மனச்சஞ்சலம், ரோகநிலை, நல்லகாரியம், போசனசுகம்.

**மிதுனம்**
சொத்துக்கால் நன்மை, அதிகாரிகள் வெறுப்பு, காரிய அலைச்சல், வாக்கு மேன்மை.

**கடகம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, தொழில்லாபம், மனமகிழ்ச்சி, காரிய அனுகூலம்.

**சிங்கம்**
அதிக பிரஜாசை, கருமசித்தி, தூரதேசச்செய்தி, பிறர் உதவி.

**கன்னி**
எதிர்பாராத நன்மை, பிரயாணம், வயிற்று வலி, புதியசிந்தை.

**துலாம்**
அச்சமான நிலை, நண்பர்கள் வெறுப்பு, காரிய தடங்கல், போசனசுகம்.

**விருச்சிகம்**
நண்பர்கள் சந்திப்பு, தேகநலன், முயற்சி கைகூடும், பிரயாணம்.

**தனுசு**
பகைவரால் நன்மை, காரிய நன்மை, சந்தோஷமான சம்பவம், விருந்துபசாரம்.

**மகரம்**
குடும்பக்கவலை, சிறுவியாதி, காரிய தாமதம், கௌரவக் குறைவு.

**கும்பம்**
உடல்நலக்குறைவு, முயற்சி தாமதம், மனக்கிலேசம், சயனசுகக் குறைவு.

**மீனம்**
கூட்டுமுயற்சி, தனவரவு, சகோதரர் உதவி, வாகனசுகம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்**

## இலஞ்ச ஊழல் ஆணைக் குழு விசாரணைப் பிரிவு அதிகாரி நம்பிக்கைக்கு உரியவரல்ல

(கொழும்பு)

அலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரியை அப்பதவியிலிருந்து நீக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டள்ளது.

ஆணைக்குழுவின் தலைவர் ஆனந்தக் குமார்சுவாமி கடிதம் மூலம் பொலிஸ்மா அதிபரிடம் இக் கோரிக்கையைவிடுத்துள்ளார்.

இக்கடித்தில் ஆணைக்குழுவின் நடவடிக்கைள் இரகசியமாகவும், நம்பிக்கையாகவும் மேற்கொள்ளப்பட வேண்டுமானால் இவரை நீக்குவது அவசியம் என குறிப்பிடப் பட்டுள்ளது.

(உ-8)

## உலகவங்கி செயற்றிட்ட தலைவர் வெள்ளியன்று வருகிறார்

(தென்மராட்சி)

உலக வங்கியின் தென்னாசியாவிற்கான அபிவிருத்திச் செயற்திட்டத் தலைவரான டாக்டர் மீக்கோ நிஷமிசு எதிர்வரும் வெள்ளிக் கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இவருடன் உலக வங்கியின் இலங்கைப் பணிப்பாளர் பீற்றர் கறலும் இங்கு வரவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

யாழ்ப்பாணம் வருகை தரும் இவர்கள், அன்றைய தினம் யாழ். அரச அதிபர் செ.பத்ம்நாதனைச் சந்தித்து மாவட்ட நிலைமைகள் பற்றியும் தேவைகள் பற்றியும் கலந்துரையாடுவார்கள்.

அதனைத் தொடர்ந்து யுத்தத்தினால் சேதமாகக்கப்பட்ட தென்மராட்சிக்கு விஜயம் செய்து அழிவுகளைப் பார்வையிடவுள்ளனர்.

பின்னர், வட்டுக்கோட்டை உடுவில் பகுதிகளில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன் புரிநிலையங்களுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இவர் யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோர் பற்றியும் ஆராய்வார் என அறியப்படுகின்றது.

(உ-77)

### இடைக்காடு ம.வி.இல் பவளவிழா

(தென்மராட்சி)

அச்சுவேலி இடைக்காட்டு மகாவித்தியாலயத்தின் பவளவிழா நிகழ்வுகள் அதிபர் வி.எஸ்.சித்திர வடிவேல் தலைமையில்அணமையில் நடைபெற்றன. இவ்விழாவில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளர் இ.முத்துரட்ணானந்தம் பிரதம விருந்தினராகவும் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் க.சின்னத்தம்பி சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். பவளவிழா மலரை யாழ்கல்வி வலயப்பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.வரதராஜா வெளியிட்டுவைத்தார். சமூகமருத்துவத்துறை வாழ்நாள் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) பாடசாலையின் மகுடவாசகம்பற்றிய சிறப்புரையை ஆற்றினார். பவளவிழா தொடர்பாக நடாத்தப்பட்டபோட்டி களில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (உ-77)

## இந்து கலாசார அமைச்சு மனவருத்தம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு 12.01.2003ஆம்திகதியன்று (ஞாயிற்றுக்கிழமை) பொதுமக்களின் பாவனைக்கென ஏ-9 வீதியைத் திறந்து விடுவதற்கான அனுமதியை எமது அமைச்சரின் வேண்டுகோளின் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சு இலங்கை இராணுவத் தளபதிக்கு வழங்கியிருந்தது. இதன் அடிப்படையிலேயே நாம் இச்செய்தியை மக்களுக்குத் தெரியப்படுத்தும் வகையில் ஊடகங்களுக்கு அறிவித்திருந்தோம்.

கடந்த ஞாயிறன்று ஏ-9 பாதை மக்கள் பானைக்கு அனுமதிக்கப்படாமை குறித்து தம்பக்க நியாயத்தை வலியுறுத்தி இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும், ஏ-9 பாதையில் பொதுமக்கள் போக்குவரத்துக்கு உதவி செய்கின்ற செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட மேற்படி குறிகியகால அனுமதி அறிவித்தல் உரிய நேரத்தில் கிடைக்காமையின் காரணமாகவே இந்தப் பாதை திறப்புச் சம்பவத்தில் தடங்கல் ஏற்பட்டது என எமது அமைச்சிற்குத் தெரியவந்துள்ளது.

ஏ-9 பாதையில் மக்கள் போக்குவரத்துக்கு அரசாங்கத்தரப்புடன் விடுதலைப் புலிகள் மற்றும் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் ஆகிய மூன்று தரப்புமே செயற்பட்டு வருகின்றன.

இதனால், மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு நாம் மனம் வருந்துவதோடு, எமது இனத்திற்கும், சமாதான முயற்சிகளுக்கும் விடுக்கப்படும் சவால்களை முறியடிக்க நாம் பொறுமையுடன் செயற்பட இத் தைப்பொங்கல் தினத்தில் திடசங்கற்பம் பூணுவோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கை இவ்வாண்டிலாவது இனிது நிறைவேறட்டும்

''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்பது தமிழரிடையே வழங்கும் பழமொழியாகும். இப்பழமொழியில் எல்லை மீறிய நம்பிக்கை உடைய தமிழன் ஒவ்வொரு ஆண்டும் தை பிறக்கின்ற போது தமிழனுக்கு வழி பிறக்கப் போகின்றது என்ற நம்பிக்கையில் உணர்ச்சிவயப்பட்டு, உற்சாகத்தோடு நல்ல பல எதிர்பார்ப்புகளை எதிர்பார்த்து வாழ்ந்தான். ஆனால் தமிழகத்திலும் சரி, தமிழீழத்திலும் சரி- ஏன் கடல் கடந்த நாடுகளிலும் சரி உருப்படியாய் எதுவும் ஏற்படாததனால் ஏமாற்றத்திலேயே தமிழன் மூழ்கியுள்ளான். ஆனால் இவ்வாண்டு பிறக்கப் போகின்ற தை ஏதோ ஒரு விதத்தில் தமிழனுக்கு குறிப்பாக ஈழத்தமிழனுக்கு ஏற்ற மிக்க வாழ்வை ஏற்படுத்தப் போகின்றது என்ற உள்ளுணர்வினால் உந்தப்பட்டு உவகையுடன் வாழ உறுதி பூண்டுள்ளான் தமிழன். எனவே இவ்விடத்தில்

'பொய்யார முத்தமிட்டு
விளையாடும் சலங்கை கட்டி
பொய்யாத செந்தமிழினை
புங்கவிதை போல் வடித்து
செய்யார்ந்த பச்சைச்
செழுமையெலாம் காண எனை
வையாய் !கனிக்கொடியாய்
வந்தருள்வாய் தைப்பாவாய!'

என்று கவியரசன் கண்ணதாசன் பாடிய மேற்குறித்த பாடல் ஏற்புடைத்தாய் அமைகிறது போல் தோன்றுகிறது.

## உலக வரலாறு உணர்த்தும்உண்மை

உலக வரலாற்றை. நாம் உன்னிப்பாகக் கவனிப்போமாயின் எந்த ஒரு நாடும் என்றுமே ஏற்றம் பெற்ற நாடாகவோ அல்லது வீழ்ச்சியுற்ற நாடாகவோ இருந்ததாகச் சான்றில்லை. தனி ஒரு மானிடனில் ஏற்படும் ஏற்ற இறக்கம் நாடுகளுக்கும் பொருந்தும். உலகத்திற்கும் பொதுவாய்ப் பொருந்தும். உலகப் புகழ் படைத்த வரலாற்று ஆசிரியன் டவுன்பி(Townby) உலக நாடுகளின் வெற்றி தோல்வியைக் கூர்ந்து ஆராய்ந்த நிலையில் (21 நாகரிகம் படைத்த நாடுகளில் பத்தொன்பது நாடுகளின் வீழ்ச்சிக்கு அடிப்படைக் காரணம் பிறநாட்டுப் படையெடுப்பு-ஆக்கிரமிப்பு அல்ல. மாறாகத் தம் மீது தமக்கு நம்பிக்கையின்மையின் விளைவு)' Of the 21 Civilizations nineteen perished not because of external aggression but due to the evaporation of belief within' என்று கூறியிருப்பது பொருளபொதிந்த பொன்னுரையாகும். எந்த ஒருநாடும் தன்மீது நம்பிக்கை இழந்த நிலையில் வாழ்ந்ததாக வரலாறு இல்லை. ஆகவே எம் தமிழினம் தலைதூக்க வேண்டின் முதலில் எமக்கு எம்மீது நம்பிக்கை வேண்டும். இதனைத் தான் விவேகானந்த அடிகள் கூட ஆண்டவன் மீது உனக்கு நம்பிக்கை இல்லாது விடினும் உன்மீது நம்பிக்கை வைத்து வாழ். என்று உனக்கு உன் மீது நம்பிக்கை இல்லையோ அன்றோடு உன் வாழ்வு முடிந்து விட்டது என்று எச்சரித்துள்ளார். அவரின் நம்பிக்கை வழங்கும் உரையை நாம் எவரும் மறக்க முடியாது. '**தெய்வத்தால் ஆகாதது எனினும் முயற்சி தன் மெய்வருந்தக் கூலி தரும**' என்ற பொய்யாமொழிப் புலவரின் கூற்றும் என்றும் பொய்க்கப் போவதில்லை.

## ஏ தமிழா நம்பிக்கை இழக்காதே!

கி.பி 10 ஆம் நூற்றாண்டிலும் 11 ஆம் நூற்றாண்டிலும் இராஜராஜசோழனும், இராஜேந்திரசோழனும் உலகெங்கும் கொடி கட்டி வாழ்ந்த வரலாறு உண்டு. கங்கை கொண்ட வரலாறு; கடாரம் கொண்ட வரலாறு ஈழத்தைக் கைப்பற்றிய வரலாறு எல்லாம் இவர்கள் காலத்தில் நடைபெற்றது. சோழன் ஆண்ட வரலாற்றினை தமிழனின் பொற்காலம் என்றும் வரலாறு வர்ணிக்கிறது. 'The golden era of the Cholas' என்று பெரும் புகழ் படைத்த வரலாற்று ஆசிரியன் நீலகண்டசாஸ்திரி சாற்றும் கருத்தினை இங்கு நினைவு கொள்வோமாக! இராஜராஜசோழன் கட்டிய தஞ்சைப் பெருவுடையார் கோயில் மிகப் பெருமையுடைய கோயில். உலகின் கவனத்தை ஈர்த்துள்ள கோயில். பெருவுடையார் கோயிலைப் பற்றி பன்மொழிப்புலவர் தே.பொ.மீ கூறுகையில்:

''**கோயில் பெரிது, கோபுரம் பெரிது, சிவலிங்கம் பெரிது, நந்திபெரிது, அனைத்தும் பெரிது,மன்னன் உள்ளமும் பெரிது**' என்று கூறியுள்ள கூற்றும்எமக்கு இனிப்பூட்டும் செய்தியாகும். இராஜராஜ சோழனின் மைந்தன் இராஜேந்திர சோழன் அடுத்துப் பெருமை பெற்றிருப்பதும் இங்கு நினைவு கொள்ளத்தக்கது. அவன் எழுப்பியுள்ள கங்கை கொண்ட சோழபுரம் கோயில் அவன் கங்கை கொண்ட வரலாற்றினையும் கோயிலின் திராவிட சிற்பத்திறத்தினையும் திறம்பட எடுத்துரைகிறது. அத்தோடு இராஜேந்திர சோழன் ஈழத்தைக் கைப்பற்றிய போது இன்றைய பொலநறுவைக்கு ''புலஸ்திய நகர்'' என்று பெயரிட்டு எழுப்பியுள்ள சிவன்கோயில் ஈழத்தை அவன் கைப்பற்றிய வரலாற்றினை எடுத்துரைப்பதோடு அவன் சிவபக்தனாக விளங்கினான் என்ற செய்தியையும் செப்புகிறது. இவை அனைத்திற்கும் மேலாக சோழர்கள் இமயத்தில் புலிக்கொடி பொறித்த புகழ் பெற்ற வரலாற்றையும் நாம் மறப்பதற்கில்லை. மாறாக என்றும் இறுமாப்புடன் பேசத்தக்க இனிய செய்தியாக இது விளங்குகிறது.

இப்பெருமை மிக்க சோழரின் வரலாறு முடிவுற்று ஏறக்குறைய ஓராயிரம் ஆண்டுகள் முடிவுற்றுள்ளது. வீழ்ந்த தமிழினம் ஆயிரம் ஆண்டுகள் கடந்த நிலையில் மீண்டும் தலைதூக்குவது இயற்கையோடு ஒட்டிய நிகழ்ச்சியாகும். விழ விழ எழுபவன் தமிழன் என்பதற்கமைய வீழ்ந்துள்ள தமிழன் மீண்டும் எழுச்சி பெறுவது உறுதி. எனவே ஏமாற்றங்கள் பல கண்ட நிலையிலும் நாம் சோர்வடையாது உள்ளத்துாய்மையோடு, துடிப்போடு, தெளிவோடு, துணிவோடு செயலாற்றின் நாளை நமதே! வெற்றி நமதே என்ற நிலை உருவாவதை உலகின் எந்த சக்தியும் தடுக்க முடியாது.

## தையின் தோற்றமும் அதன் வரலாறும்

விழா எடுத்து வீழ்ந்தவன் தமிழன் என்று கூறுமளவிற்கு தமிழன் எடுக்காத விழாக்களில்லை. தமிழன் பல விழாக்களை எடுத்துள்ளான் என்பதற்கு ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தரின் பின்வரும் பாடல் சான்று பகர்கிறது.

''**ஐப்பசி ஓண விழா**
**கார்த்திகை விளக்கீடு**
**மார்கழி ஆதிரைநாள்**
**நெய்ப்பு,சம் ஒண்புழுக்கல்**
**நேரிழையார் கொண்டாடும்**
**தைப்பு,சம்**
**மாசிக்கடலாட்டு**
**பங்குனி உத்தரம்**
**பதினெண் கணங்கள் தம்**
**'அட்டமி' நாள்''**

என்று ஞானசம்பந்தர் குறிப்பிடும் இவ்விழாக்கள் எதுவும் தமிழனின் முழுத்தனித்துவத்தைக் காட்டுவதாக அமையவில்லை. சிலவற்றில் தமிழ்ச்சாயல் உண்டு. ஆனால் பலவற்றில் வடநாட்டின் வல்லாண்மைக்கு நாம் ஆளாகி இருப்பதையே இவ்விழாக்கள் எடுத்துக்காட்டுகின்றன. ஆனால் இவற்றுக்கு முற்றிலும் மாறுபட்டு விளங்குவது தான் தைப்பொங்கல் திருநாள் 'தைப்பொங்கல் திருநாள்' என்ற சொற்றொடரே தனித்தமிழ்ச் சொல்லாட்சியையும் தமிழன் அடையாளத்தையும் காட்டி நிற்கின்றது.

## தைப்பொங்கல்வேறு மகரசங்கராந்திவேறு

இங்கும் தமிழன் தனித்துவத்தைச் சிதைக்கும் முறையில் 'மகர சங்கராந்தி' என்ற வடமொழிச் சொல்லாட்சி எம்மீது திணிக்கப்பட்டுள்ளது. வேறு சொற்களில் இயம்பின் வடநாட்டின் பண்பாட்டுப் படையெடுப்பிற்கு சான்றாய் மகர சங்கராந்தி என்ற சொல்லை வலிந்து வழக்கத்திற் கொண்டு வர பெரும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. பண்பாட்டுப் படையெடுப்பு காலப்போக்கில் அரசியற் படையெடுப்புக்கும் வழிவகுக்கும் என்பதை நாம் உணர்ந்து என்றும் விழிப்போடு இருத்தல் வேண்டும்.

## சுப்பிரமணியமுதலியார் சுட்டிக்காட்டும் பாங்கு

தமிழர் பொங்கலுக்குச் செய்கின்ற சடங்குகள் வட மொழியாளர் சங்கராந்திக்குச் சென்றதில்லை. வடமொழியார் செய்வனவற்றைத் தமிழர் செய்யும் ஏற்பாடும் கிடையாது. எனவே ஒரு நாளை வெவ்வேறு வகையில் இவர்கள் அறிந்து கொண்டா

**மா.க. ஈழவேந்தன்**

டினர். எனவே பயிர்களுக்கு இன்றியமையாத வெப்பத்தைத் தந்து உயிர் கொடுத்து வளர்த்து வந்த கதிரவனை நோக்கி உழவர்களாகிய தமிழர்கள் அவ்வுதவியினால் வந்த புதிய விளைவைக் கொண்டு கொண்டாடுவதாகிய இப்பொங்கல் தமிழர்க்கே சிறப்பாக உரிய விழாவாகின்றது என்பது வெளிப்படை என்று தமிழறிஞர் சி.கே. சுப்பிரமணியமுதலியார் மொழிந்துள்ள கூற்றுக்கு நாமும் வழிமொழி கூறும் நிலையிலேயே இருக்கிறோம்.

## போகிப் பண்டிகை

தைப்பொங்கல் விழா சிறப்பாக அமையப் பொங்கலுக்கு முதல் நாள் நாம் வதியும் வதிவிடமும் சுற்றாடலும் தூய்மையாக்கப் படுகின்றது. இது போகிப் பண்டிகை என்று குறிப்பிடப்படுகின்றது. எம்மைச் சூழ்ந்துள்ள அழுக்குகள் அனைத்தும் போக்கப்படுவதனால் போகிப்பண்டிகை என்று பெயர்பெற்றது போலும். '**மாதங்களில் நான் மார்கழி**' என்று கண்ணன் பகவத்கீதையிற் பகர்ந்திருந்தாலும் பீடை-நோய் பிடித்த மாதம் மார்கழி என்று தமிழர்கள் கருதுவதனால் மார்கழியைப் போக்கி தையை வரவேற்கும் நிகழ்ச்சியாக இது அமைகிறது.

## உழவின் உயர்வு

உழவின் உயர்வை உணர்த்தும் நாள் தைத்திருநாள். ''**பாடுபடுபவர்க்கே இந்தப் பாரிடம் சொந்தமையா**' என்ற கவிமணியின் கூற்றினை ஏற்று உலகின் அச்சாணியாக விளங்கும் உழவுத் தொழிலின் உயர்வை உவந்து போற்றும் விழாவாகவும் இப்பொங்கல் விழா அமைகிறது. உழவுத் தொழில் உயர்ந்து விளங்க உறுதுணையாக விளங்குவது ஞாயிறின் தோற்றமாகும். எனவே ''**ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்**'' என்று கதிரொளி வீசும் கதிரவனுக்கு நன்றி செலுத்தப்படுகின்றது. 'இருள் கடிந்து உள்ளத்து எழுகின்ற ஞாயிறே போன்று' இறையருள் தன் இதயத்தில் ஏற்றப்பட்டுள்ளது என்று மணிமொழியாளர் -மாணிக்கவாசகர் மொழிந்துள்ள திருவாசகச் சொற்றொடரும் எம்மை ஆட்கொள்ளத்தான் செய்கிறது.

## நன்றியுணர்வைநவிலும் மாட்டுப்பொங்கல்

''பொங்கலோ பொங்கல்'' என்று தைப்பொங்கலை எம் நெஞ்ச நிறைவோடு கொண்டாடிய நிலையில் அடுத்த நாள் நிகழ்ச்சி மாட்டுப்பொங்கலாக - பட்டிப் பொங்கலாக மலர்ந்துள்ளது. செங்கதிர்ச் செல்வனுக்கு நன்றி நவின்ற தமிழன் தன் உற்றார் உறவினர்களுடன் கூடி மகிழ்ந்த தமிழன் தன் உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கிய- ஏற்றம் தந்த எருதினையும் நனிசுவை மிக்க பால் தந்த பசுவினையும்- ஆவினையும் மறக்காத நன்றியுணர்வுள்ள விழாவாக மாட்டுப் பொங்கல் அமைகிறது. உண்ணீர்! உண்ணீர்! என்று தனக்கு துணை நின்ற - ஏற்றம் தந்த எருதுக்கும் பசும் பால் தந்த பசுவிற்கும் தமிழன் உணவூட்டும் காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும். தமிழனின் நன்றியுணர்வை மானிட சமுதாயத்தை மட்டும் தழுவி நில்லாது விலங்கு உலகையும் வியந்து போற்றுகின்ற உயர் உள்ளத்தையும் உலகிற்கு எடுத்துக்காட்டுகிறது. எனவே இவ்வாண்டுப் பொங்கலை வரவேற்கும் நாம் '**மன்னிய சுவை என இனிக்கும் எம் வண்டமிழ் பரவ யாண்டும்**' என்று வாழ்த்துவோமாக!

## குருப்பட்டம்


(யாழ்ப்பாணம்)


ஊர்காவற்றுறை கிழக்கு புனித அந்தோனியார் ஆலயப் பங்கைச் சேர்ந்த அருட்திரு சில்வேஸ்ரர் அடிகள் அண்மையில் குருப்பட்டம் பெற்று தனது முதலாவது திருப்பலியை கடந்த ஞாயிற்றுக்கிழமை புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக் கொடுத்தார். (உ)

## சேமக்காலை புனரமைப்பில்லை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை கிழக்கு கத்தோலிக்க சேமக்காலை நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாது பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றது. (உ)





பருத்தித்துறை கோட்டு வாசல் அம்பாள் மீது பாடப்பட்ட சாமுண்டி கானம் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவிலே வெளியீட்டுரையை நிகழ்த்திய யாழ் பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் ஏ. சண்முகதாஸ் கௌரவிக்கப்படுவதையும்,பாடலாசிரியர் பீ.சக்திவேலுக்கு மல்லாகம் மாவட்ட நீதிபதி பா. சுப்பிரமணியம் அருட்கவியரசன் பட்டம் வழங்கிக் கௌரவீப்பதையும் படங்களில் காணலாம்.





மல்லாகம் விசாலாட்சி வித்தியா சாலையின் பரிசளிப்பு விழா அண் மையில் ந டைபெற்ற போது வாத்தியக் குழுவினர் விருந்தினரை அழைத்து வருவதையும் மேலைத்தேய

வாத்தியக்கருவிகளை உருவாக்கிய திரு வே.பாலேந்திரன் அவர்களுக்கு பாடசாலை அதிபர் மலர்மாலை அணிவித்து கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்

# அமெரிக்க-இலங்கை கூட்டு இராணுவ பயிற்சி இம்மாத இறுதியில் ஆரம்பம்

(கொழும்பு)

அமெரிக்கா மற்றும் இலங்கை இராணுவத்தினர் கூட்டாக இணைந்து ''பலன்ஸ் ஸ்ரைல்'' என்னும் கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபடவுள்ளதாக இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்ட விசேட செய்தி ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது

அச் செய்திக் குறிப்பில் மேலும், இப் பயிற்சி இம் மாத இறுதியில் ஆரம்பமாகி எதிர் வரும் மார்ச் மாதம் வரை நடைபெறவுள்ளது.

இது இவ்விரண்டு நாடுகள் இடையேயும் நடைபெறும் 9 ஆவது கூட்டு இராணுவப் பயிற்சி நடவடிக்கை ஆகும்.

இவ் இராணுவப் பயிற்சி மூலம் ஒருவரிடமிருந்து மற்றொருவர் பயிற்சி பெறுவதுடன் இராணுவ உபகரணங்களின் இயக்கத் தொழில் நுட்பங்களும் பரிமாறிக் கொள்ளப்படும்.

ஆரம்பமாகவுள்ள இப்பயிற்சியில் இராணுவத்தினர், மற்றும் கடற்படையினர் ஈடுபடவுள்ளனர்.

இவர்களுக்கு முக்கியமாக இராணுவத் தொழில் நுட்பம் ஆயுத இயக்கம், மருத்துவத் தொழில் நுட்ப இராணுவ நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்படும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

## பாயிஸ் கொலை முயற்சி விசாரணை தொடரும்

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸை கொலை செய்யும் சதித்திட்டம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடத்தப்படும் என சிலாபம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் றொசான் பெர்ணான்டோ அறிவித்துள்ளார்.

கடந்த மூன்று நாட்களாக மேற்கொண்ட விசாரணைகளில் இத்தகைய படுகொலை சம்பந்தமான விபரங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

கடந்த சனிக்கிழமை இரவு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அமைப்பாளரை கொலை செய்ய முயற்சி செய்தார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் 11பேர் கொண்ட பாதாள உலகக் கோஷ்டியினரையும் அவர்கள் பயணம் செய்த வான் ஒன்றினையும் பொலிஸார் கைப்பற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## பாடசாலை மாணவர்களுக்கு பஸ்கட்டணச் சலுகை வட-கிழக்கில் இல்லை

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான பஸ் கட்டணச் சலுகை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது.

இவ்வாறு நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கொழும்பு தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட இச் சங்கம் பாடசாலை மாணவர்களுக்கான பஸ் கட்டணத்தின் அரைவாசித் தொகையை மாத்திரம் அறவிடும் நடைமுறை அடுத்த மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் அமுலாகும்.

அதேவேளை, இவை வடக்கு-கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களிலேயே நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## மாணவர் மத்தியில் திறன்விருத்திப்போட்டிகள்

(யாழ்ப்பாண )

யாழ். பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட மாணவர்களிடையே சிறுவர் பாதுகாப்பு நிதிய ஏற்பாட்டில் கவிதை, கட்டுரை பாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 18,19 ஆம் திகதிகளில் யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன

இந்த வகையில், மத்திய பிரிவுக்கான கட்டுரைப் போட்டி எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10 மணிக்கும்

கீழ்ப் பிரிவுக்கான பாட்டு மற்றும் பேச்சுப் போட்டிகள் 19 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 30 மணிக்கும்,

மத்திய மற்றும் மேற்பிரிவுகளுக்கான கவிதைப் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கும் இடம்பெறவுள்ளது (உ)

## பாலபத்தபெண்டியின் இடத்திற்கு ஹரீம் பீரிஸ்

(கொழும்பு)

ஐரோஜா நிதிநிர்வாக நிறுவனத்தின் முதலீட்டு ஆய்வாளராக பணியாற்றிவந்த ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவின் பேச்சாளரான ஹரீம்பீரிசை முதலீட்டு ஆய்வாளர் பதவியில் இருந்து விலகுமாறு மேற்படி நிறுவனத்தினால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இவர் ஜனாதிபதியின் பேச்சாளராக நியமிக்கப்பட்டபின்னர் நிறுவனத்தின் பணிகளை சரிவரச் செய்வது இல்லை எனக்கூறிய நிறுவனம் இவருடன் இன்னும் இருவரை பணியில் இருந்து நிறுத்தப் போவதாக அறிவித்துள்ளது.

இதேவேளை ஹரீம் பீரிஸ் அங்கிலிக்கன் கிறிஸ்தவ திருச்சபையின் போதகராகவும் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது

இதேவேளை, ஜனாதிபதியின் செயலாளர் பதவிக்கு பாலபத்தபெண்டிக்கு பதிலாக ஹரீம் பீரிஸ் நியமனமாகலாம் என ஊகங்கள் வெளிவந்துள்ளன. (உ-10)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சாமுவல்சன்ஸ் அன்கம்பனி லிமிடெட், ஹியுமன் டயக்னஸ்ரிக் லிமிடெட், ஹெலத்வெல்லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் இன்று மு.ப 11 30 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதி 412, 4114 ஆம் இலக்ககட்டடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளன. (உ)

## இணைந்த நூலகர் சேவை விஸ்தரிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அரசாங்க வாசகர்சாலைகளில் கடமையாற்றும் நூலகர்களின் நன்மைகருதி இணைந்த நூலகர் பொறுப்பாளர் சேவையை ஸ்தாபிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் நாட்டில் உள்ள சகல நூலகங்களையும் இணைந்த சேவையில் உள்வாங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதேவேளை, இணைந்த சேவைக்கு தகைமை உடைய சகல நூலகர்களையும் தமது விண்ணப்பப் படிவங்களை பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்குமாறு அரசாங்க நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சின் செயலகம் அறிவித்துள்ளது. (உ-10)

## புனரமைப்பு உபகுழு கூட்டம் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

புனரமைப்பு உப குழுவின் கூட்டம் இன்றும் நாளையும் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

இன்றைய அமர்வில் அரச தரப்பு பிரதிநிதிகளாக சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேணாட் குணதிலக நாடாளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீன் மற்றும் சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த தர்மஸ்ரீ பீரிஸ் பி மத்யுகொட, கே. சரலியத், எம்.ஐ. எம். ரபீக் டாக்டர், எஸ். ஹிஸ்புல்லா ஆகியோரும்.

விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், ஜோய் மகேஸ்வரன், பாலகுமார், பூவண்ணன், கௌசல்யன், திலக், பாபா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, இன்றைய அமர்வில் ஜப்பானியப் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர். (உ)

## மனித உரிமை, ஆ. கு இல், மகனின் கைது குறித்து தாய் ஒருவர் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறையில் இடம் பெற்ற குழு மோதல் சம்பவம் தொடர்பில் தனது மகன் கைது செய்யப்பட்டிருப்பது முறையற்றது என தாய் ஒருவர் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளார்.

மேற்படி குழுமோதல் சம்பவம் தொடர்பில் நாவாந்துறையைச் சேர்ந்த தா. கமலதாசன் (வயது 28) என்பவரை நேற்று முன்தினம் நாவாந்துறை கடற்கரையில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பில் கைது செய்யப்பட்டவரின் தாயார் திருமதி எஸ் தாசீசியஸ் நேற்று யாழ் மனித உரிமை ஆணைக்குழுவில் செய்துள்ள முறைப்பாட்டில்,

மோதல் சம்பவத்திற்கும் எனது மகனுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

தொழிலுக்குச் சென்ற வேளை நோயாளியான எனது மகனைக் கைது செய்த பொலிஸார் கடுமையாகத் தாக்கிக் காயப்படுத்திய நிலையில் விலங்கிட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-16,6)

## பகவத் கீதைபற்றி பல்கலையில் கருத்துரை

(யாழ்ப்பாணம்)

வைத்தியகலாநிதி கலைவாணி உக்கிரப் பெருவழுதிப்பிள்ளையின் 'பகவத்கீதையும் வாழ்க்கையும்' என்னும் தலைப்பிலான கருத்துரை நாளை வியாழக்கிழமை பி.ப. 4 00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. (உ)

## ஆன்மீக பெருவிழா

(சண்டிலிப்பாய்)

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் நாளை வியாழக்கிழமை வித்தியாலய அதிபர் தலைமையில் விவேகானந்தரின் ஆன்மீகப்பெருவிழா காலை 9-30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிழ்வில் சைவப் புலவர் கந்தசத்தியதாசன் சொற்பொழிவாற்றுவார். (த-232)

## பொங்கல் பெருவிழா

(சண்டிலிப்பாய்)

சித்தன்கேணி அருள்மிகு ஸ்ரீநாக கன்னி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் பெருவிழா இன்று காலை 8-30 மணியளவில் நடைபெறும். ஆலயத்தில் தீமிதிப்பு மற்றும் ஆன்மீகச் சொற்பொழிவுகள் என்பன இடம்பெறும். (த-232)

## அமைச்சர் ஹக்கீமுக்கு மேலதிக பாதுகாப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கு மேலதிக பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் தனது பாதுகாப்பை பலப்படுத்துமாறும் ஹக்கீம் விடுத்த வேண்டுகோளையடுத்தே மேலதிக பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார். (உ-8)

## சிவாஜிலிங்கம் எம். பி. கைதிகளின் நிலையை நேரில் அறிந்தார்

(கொழும்பு)

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் நேற்றுமுன்தினம் களுத்துறைச் சிறைச்சாலைக்குச் சென்று தமிழ் அரசியல் கைதிகளுடன் கலந்துரையாடியுள்ளார்.

தமது வழக்குகளை வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றுமாறு அங்கு சிறை வைக்கப்பட்டுள்ள 70 அரசியல் கைதிகளும் ஒருசேர தன்னிடம் கோரிக்கை விடுத்ததாக தெரிவித்த சிவாஜிலிங்கம் இது குறித்து தான் உள்துறை அமைச்சருக்கு அறிவித்திருப்பதாகவும் குறிப்பிட்டார். (உ)

## எட்டு வருடங்களில் வெண்புறா நிறுவனம் 1540பேருக்கு செயற்கை கால்களை வழங்கியது

(கிளிநொச்சி)

வெண்புறா செயற்கை உறுப்பு உற்பத்தி நிறுவனம் 1994ஆம் ஆண்டுமுதல் 2092ம் ஆண்டு டிசம்பர் வரையான காலப்பகுதியில் ஆயிரத்து540 செயற்கை கால்களை, கால்களை இழந்தவர்களுக்கு வழங்கியுள்ளது.

இது தொடர்பாக இந்நிறுவனத்தின் குரல்தரவல்ல அதிகாரி ஒருவர் கருத்துவெளியிடுகையில்,

கொடிய யுத்தத்தின் போது கால்களை இழந்த பலருக்கு எமது நிறுவனம் பலவழிகளில் உதவி வருகின்றது,

அந்த வகையில் 1994 ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை 95 முச்சக்கர வண்டிகளையும் 101 சக்கர நாற்காலிகளையும் 295 ஊன்றுகோல்களையும் மற்றும் உபகரணங்களையும் எமது நிறுவனம் வழங்கியுள்ளது.

மேலும் புதிதாக ஆயிரத்து 250 செயற்கைக் கால்களை பொருத்துவதற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது என்றார்.

இவற்றை விட கண்ணிவெடி பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து செயற்பட்டு வருகின்றமை குறித்தும் அவர் சுட்டிக்காட்டினார். (உ-10)

இராணுவ

திய முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்.எம். வி. டி. கொட்டகதெனியாவும் விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர் குறள்

# வலம்புரி

## துயர் களையப் பொங்கட்டும்

தைத்திருநாள் இன்று. தமிழர்களின் வாழ்வில் ஓர் புனிதமான நாள், வியர்வை சிந்தி உழைத்த விவசாயிகள் தங்கள் தொழிலுக்கு உறுதுணை புரிந்த கதிரவனுக்கு வந்தனை செய்வதற்காக வயலிலே அறுவடை செய்த நெல்லைக் கொண்டு கதிரவனுக்கு பொங்கிப் படைத்து மகிழ்வார்கள். தாம் அறுவடை செய்த கனவகைகளையெல்லாம் கதிரவனுக்கு உவந்தளித்து, இந்த வையகத்திலேயே தமிழர்கள் நன்றிக் கடன் செலுத்தும் இயல்பினர் என்பதை உறுதிப்படுத்துவர். தமது உற்பத்திக்கு வெய்யிலையும், மழையையும் தந்த சூரிய பகவானுக்கு நன்றி கூறும் இந்த உயரிய பண்பாட்டைக் கொண்ட பெருமை தமிழர்களுக்கு மட்டுமேயுண்டு.

என்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கு என்ற வள்ளுவன் வாய்மொழி தமிழர்களின் செய்நன்றி மறவாத தன்மைக்குச் சான்றாகும்.

அந்தச் சான்றை உலகிற்கு உறுதிப்படுத்துவதாக தைப் பொங்கல திருநாள் அமைந்துள்ளது.

தமிழ் மக்களால் கொண்டாடப்படும் தைப்பொங்கல் கருத்தியல் ரீதியில், உளவியல் ரீதியில் பல்வேறு தத்துவங்களைக் கொண்டது.

பகலவனுக்கு நன்றி செலுத்தும் தைப்பொங்கல், வியர்வை சிந்தி உழைத்துக் களைத்த விவசாயிகள் தம் விளை பொருட்களை வீட்டில் களஞ்சியப்படுத்திவிட்டு, ஆனந்தமாகப் பொங்கிப் படைத்து குடும்ப அங்கத்தவர்களுடன், அயலவர்களுடன், சுற்றத்தவர்களுடன் உண்டு மகிழ்ந்து தம் களைப்பை மறந்து மீண்டும் உழவுக்கு உற்சாக மூட்டுவதாகவும் அமைந்துள்ளது.

அத்துடன் மா, பலா, வாழையெனும் முக்கனிகளும்; சர்க்கரையும் சேர்ந்து தரும் இனிமை ஒவ்வொருவருடைய வாழ்விலும் ஏற்பட வேண்டும் என்பதை உணர்த்துவதாகவும், தைப்பொங்கல் திருநாள் அமைந்துள்ளது.

இத்தகைய உயரிய திருநாளை ஈழத்தமிழர்கள் எத்தனை பேர் தங்களின் இல்லங்களில் பொங்கி மகிழ்கிறார்கள் என்பது கேள்விக்குறியது.

சொந்த வீடிழந்து, சொத்திழந்து, சொந்தங்களையே இழந்ததனால் பொங்கலென்ற இனிமையே இழந்து பல வருடங்களாகப் போன சோகங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

யுத்தத்தின் கோரப் பிடிக்குள் மகனை, மகளை, தாயை, தந்தையை, கணவனை, மனைவியை இழந்த குடும்பங்களிலும் பொங்கல் உண்டு ஆனால் அது சுகப்பொங்கல் அல்ல அவர்களின் கண்களில் எழுகின்ற கண்ணீர்ப் பொங்கல், இந்தக் கண்ணீருக்கு ஆறுதல் சொல்ல யார் உளர். என்ன தான் கூறினாலும், உறவுகளை இழந்த குடும்பங்களின் உள்ளக் குமுறல்கள் என்று தணிகின்றதோ அன்று தான் அவர்களின் வாழ்விலும் பொங்கல் ஏற்படும். அத்துயரங்களை களைவதாக இப் பொங்கல் பொங்கட்டும்.

# நடைபெற்றுவரும் சமாதான முன்னெடுப்புக்களில் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு திருப்தி இல்லையாம்



(கொழும்பு)

ஸ்ரீ.ல.சு. கட்சிக்கும் ஜே.வி.பி.க்கு மிடையிலான பேச்சுக்கள் இப்போதும் ஆரம்பக்கட்டத்திலேயே இருக்கின்றன. இதனால் அதுபற்றிக் கவலைப்படுவதற்கு காரணம் ஏதுமில்லை என்று ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க சமசமாஜ - கம்யூனிஸ்ட் கட்சிகளிடம் தெரிவித்துள்ளார்.

வெள்ளியன்று நடைபெற்ற பொ.ஐ.மு. யின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இரு கட்சிகளும் இணைந்து ஒரு பொதுவான முன்னணியை அமைக்கும் சாத்தியங்கள் பற்றி ஆராய்ந்து வருகின்றனவேயன்றி இதுவரை இறுதியான முடிவெதனையும் எடுக்கவில்லை என இக்கட்சி வட்டாரங்களும் தெரிவித்துள்ளன. பேச்சுக்களில் ஏற்படும் முன்னேற்றம் பற்றி பொ.ஐ.மு. நிறைவேற்றுக்குழுவுக்கு ஜனாதிபதி தெரிவிப்பார்.

இப்பொழுது நடைபெற்று வரும் சமாதான முன்னெடுப்புக்கள் பற்றி ஜனாதிபதிக்கு திருப்தி கிடையாது. சமாதானப் பேச்சுக்கள் இதே திசையில் தொடர்ந்து முன்னேறினால் பெரும் நெருக்கடிகளை நாடு எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று ஜனாதிபதி தெரிவித்ததாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஜனாதிபதியின் பிரதிநிதி யொருவரை சமாதானப் பேச்சுக்களில் அனுமதிக்குமாறு விடுத்த கோரிக்கைக்கு அரசாங்கம் பதிலேதும் தெரிவிக்கவில்லை. ஜனாதிபதியின் ஆலோசனைகளையும் ஐ.தே.மு. அரசு கேட்டுச் செயற்படவில்லை. இந்நிலையில், நாட்டைக் காப்பாற்றுவதற்கு சில நடவடிக்கைகளைத் தான் எடுக்க வேண்டியிருக்கும் என்றும் ஜனாதி பதி தெரிவித்துள்ளார். (உ)

## இனிய மாலைப் பொழுது

(யாழ்ப்பாணம்)

இனிய இதயங்கள் அமைப்பு ஏற்பாட்டில் வாழ்வகப் பிள்ளைகளுடனான இனிய மாலைப் பொழுது நிகழ்வு இன்று பி.ப 2 மணிக்கு மருதனார்மடம் யூனியன் கல்லூரி மண்டபத்தில் இனிய இதயங்கள் அமைப்பின் தலைவர் சி.விக்கினராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி தெற்கு பிரதேச செயலர் எஸ்.ஆர்.ஜெயப்பிரகாசமும் சிறப்பு விருந்தினர்களாக சமாதான நீதிவான் அ.தற்பரானந்தன், கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகர் கே.சிவநேசன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் மன்றத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-3)

# சூதாட்ட கிளப்புகளுக்கு வரிக்குறைப்பு

## மக்கள் விடுதலை முன்னணி கண்டனம்

(கொழும்பு)

சூதாட்டக் கிளப்புகள் கசினோக்களுக்கு வரிக்குறைப்புச் செய்துள்ளமையை ஜே.வி.பி கண்டித்துள்ளது.

வாழ்க்கைச் செலவுப் பிரச்சினையைச் சமாளிக்க முடியாமல் மக்கள் அல்லோலகல்லோலப்படும் நிலையில் இந்த வரிக்குறைப்பு ஆத்திரமூட்டும் செயலாகும். எனவும் ஜே.வி.பி கருத்து வெளியிட்டுள்ளது.

சூதாட்டக்கிளப்புகளுக்கான வரி 5 இலட்சத்திலிருந்து 30 ஆயிரமாக நிதிஅமைச்சினால் குறைக்கப்பட்டுள்ளது. கசினோக்களுக்கான ஆண்டு வரி 12 மில்லியனில் இருந்து 5 இலட்சமாக குறைக்கப்பட்டுள்ளது.

ஆனால், மாவின் விலை இரண்டரையினால் அதிகரித்துள்ளது. கசினோ விடுதிகளுக்கு சலுகைகளை வழங்குவதும் சாதாரண மக்களை நடமாடும் எலும்புக் கூடுகளாக மாற்றுவதும் இந்த அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறது.

இதற்கெதிரான அமைதிமுறைப் போராட்டத்தை மக்கள் முன்னெடுக்க வேண்டும் என்றும் ஜே.வி.பி கேட்டிருக்கிறது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு முன்வைத்திருக்கும் பொருளாதார மறுசீரமைப்பும், அபிவிருத்தியும் இல்லாத ஒன்றைக் காண்பிக்கும் வித்தை போன்றதாகும் என்று மேலும் ஜே.வி.பி கருத்து வெளியிட்டுள்ளது. (உ)

# சற்ஸ்கோர் முறைக்கு ஏற்ப அடுத்த ஆண்டும் பல்கலை அனுமதி

## பல்கலை மானிய ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு கடைப்பிடிக்கும் சற்ஸ்கோர் ஒழிக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்திகளை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மறுத்துள்ளது.

அடுத்த ஆண்டும் இம்முறைக்கு ஏற்பவே பல்கலைக்கழகத்திற்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

இதேசமயம், அண்மையில் சற்ஸ்கோர் முறைபற்றி பாராளுமன்ற தெரிவுக்குழுவின் பிரதிநிதிகள் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் அதிகாரிகளுடன் கலந்துரையாடிய போது, இந்த முறையின் சாதகங்கள் குறித்து கருத்துக்கள் பரிமாறப்பட்டிருந்தன.

அத்துடன், இது சம்பந்தமான விசேட கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## சீரான மின்சாரம

(சண்டிலிப்பாய்)

சில்லாலை, பணிப்புலம் ஆகிய பகுதிகளிற்கு வலுக்கூடிய சீரான மின்சாரம் வழங்க மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த வகையில் மேற்படி பகுதிகளில் பிரதான வீதிகளில் மின்மாற்றிகளை இணைப்பதற்கான அனைத்துப் பூர்வாங்க ஏற்பாடுகளையும் மின்சார சபை ஆரம்பித்துள்ளது. (உ-258)

# பாதை பாவிக்க அனுமதியில்லை

## 12 ஆயிரம் பேர் பாதிப்பு

(தென்மராட்சி)

நாகர் கோவில் பகுதியிலுள்ள செம்பியன் பற்று சுண்டிக்குளம் பாதை மூடப்பட்டுள்ளமையால் இப்பகுதியிலுள்ள பத்து கிராம சேவையாளர் பிரிவுகளில் மீளக்குடியமர்ந்துள்ள சுமார் 12 ஆயிரம் பேர் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதன் விளைவாக மீளக்குடியமர்ந்தவர்கள் தமக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும் தமது உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கும் பல்வேறு விதமான கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

அத்துடன் இப்பகுதியில் பாடசாலை செல்லும் பிள்ளைகளும், வேலைத் தளங்களுக்குச் செல்பவர்களும் பலவசதியீனங்களைச் சந்தித்து வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

இப்பகுதியில் மீன்பிடித் தொழில் புரியும் சுமார் 2 ஆயிரம் பேர் பிடிக்கப்படும் மீனை விற்பனை செய்யவும் பெரிதும் சிரமப்படுகின்றனர். (உ-77)

# புதிய முகாமைத்துவ அமைச்சர் நியமனம்

(கொழும்பு)

புதிய அமைச்சரவையின் முகாமைத்துவ அமைச்சு பதவியை பாராளுமன்ற உறுப்பினர் சரத்சந்திரா இராஜகருணா பொறுப்பேற்கவுள்ளார்.

இப்பதவிக்குப் பொறுப்பாக ஒருவரை நியமிப்பதில் இதுவரை காலமும் இழுபறி நிலை காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முகாமைத்துவ அமைச்சை அனைத்து நிவாரண அமைச்சு என பெயர் மாற்றம் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதன்படி 7 புதிய அமைச்சர்களும் அடுத்த வாரமளவில் தமது பதவிகளைப் பொறுப்பேற்பர் என பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார். (உ-8)

# பசு மாடுகள் வெட்டிய இருவருக்கு சிறைத்தண்டனை

(உடுவில்)

அனுமதியின்றி பசுமாடுகளை வெட்டிய குற்றத்திற்காக இருவருக்கு 4 மாத சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

உரிய அதிகாரிகளின் அனுமதியின்றி இரு பசுமாடுகளை இறைச்சிக்காக வெட்டிய இருவருக்கே நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றத்தினால் இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இச்சிறைத்தண்டனை பெற்ற ஒருவரின் மனைவியும் அவரது கைக்குழந்தையும் அதிகாரிகளுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுத் தகாத வார்த்தைகளைப் பேசியமைக்காக விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (உ-261)

# ஆசிரியர் பற்றாக்குறை குறித்து

## அடைக்கலநாதன் பிரஸ்தாபம்

(கிளிநொச்சி)

மன்னார்,முல்லைத்தீவு மாவட்டங்களில் தொடர்ந்தும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இது பற்றி கருத்து வெளியிட்ட வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதன் 3 வருடங்களாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இது விடயம் குறித்து அறிவித்த போதும் எதுவிதபலனும் இல்லைஎனக்கூறியுள்ளார்

இதேவேளை வடக்கு-கிழக்கு மாகாணங்களிற்கு விரைவில் மூவாயிரம் ஆசிரியர்களை நியமிக்கவுள்ளதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

## தினசரி தியானம்

# புகழ் பெறுதல்

நல்ல காரியங்கள் செய்தால் சந்தோஷம் பிறக்கிறது. கெட்ட காரியங்கள் செய்தால் மனவருத்தமே உண்டாகிறது. நம் செய்கைகள் எல்லாம் பலனை ஏற்கின்றன. செய்கையின்றிப் பலன் இல்லை. பரமனின் பாதாரவிந்தத்தை அடைய நேர்மை தான் வழி. அதன மூலம் எதையும் நாம் அடைய முடியும்.

மனத்தாலோ, வார்த்தையாலோ, செய்கையாலோ எந்தப்பிராணிக்கும் தீங்கிழையாதே. துஷ்டர்களிடத்திலும் சாந்தமாக நட. இங்கும் அப்பாலும் உனக்குப் பேரும் புகழும் உண்டாகும்.

சுவாமி சிவானந்தர்

# குறவர்குடிப் பெண்கள் பயணிகளிடம் கைவரிசை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் குறத்திப் பெண்களின் நடமாட்டம் மீண்டும் அதிகரித்துள்ளது.

இவர்களில் சிலர் யாழ் ஆஸ்பத்திரிக்கு முன்பாகவுள்ள நடை பாதையில் இருந்து பொதுமக்களுக்கு கைரேகை சாத்திரம் பார்த்து வருகினறனர்.

வேறும் சில குறத்திப் பெண்கள் பஸ்களில் பயணம் செய்து பயணிகளிடம் இருக்கும் கைப்பைகளை மிகவும் தந்திரோபாயமாக அபேஸ் செய்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் பஸ் ஒன்றில் பயணம் செய்த சாவகச்சேரியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் நகர வங்கியொன்றில் மீளப்பெற்ற 96 ஆயிரம் ரூபாவை இத்தகைய பெண் ஒருவரிடம் பறிகொடுத்த பரிதாபகரமான சம்பவமும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

**நம்பியாரின்...**

ரியர் ஜீ.எல்.பீரிஸ் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பொர்ணானடோ உட்துறை அமைச்சின் செயலாளர் யுனைட் ஆகியோர் உடனிருந்தார்கள்.

இச் சந்திப்பின் போது யாழ். குடாநாடடில் அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே உள்ள பிரதேசங்களில் இடம் பெயர்ந்த மக்களை மளக்குடியமர்த்துவதற்கு அரசும் விடுதலைப் புலிகளும் ஒரு முடிவுக்கு வந்திருப்பதுபோல், உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த் துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதமரிடம் கூட்டமைப்பு எம்பிக்கள் வலியுறுத்திக் கேட்டனர். இதனையடுத்து முன்னாள் இந்திய இராணுவத் தளபதி சதீஸ் நம்பியாரின் ஆலோசனை அறிக்கை கிடைக்கப் பெற்றபின் உயர் பாதுகாப்பு வலய மீள் குடியேற்றம் தொடர்பான சுமுகமான முடிவு எடுக்கப்படுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா உறுதியளித்துள்ளதுடன் சற் புள்ளியிடுதல் மூலம் யாழ். பல்கலைக் கழக அனைத்துப் பீடங்களுக்குமான தெரிவில் தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்ததாகவும் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுபபினர் அ.விநாயகமூர்த்தி வலம்புரிக்குத் தெரிவித்தார். (ம)

**யாழ்...**

தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ராக்கிங்கில் ஈடுபட்ட 2ம் வருட மாணவர்களுடன மூன்றாம் வருட மாணவர்கள் வாக்கு வாதத்தில் ஈடுபடடதனால் வாய்த் தர்க்கம் முற்றி முடிவில் இருதரப்பும் கைகலப்பில் ஈடுபட்டனர்.

பல்கலை.நிர்வாகத்தினரின் தலையீட்டால் நிலைமை ஓரளவு தணிந்துள்ளது. (இ-6)

**நிரந்தர...**

அடிப்படையில் அனைவரும் பாடுபட வேண்டும்.

நாட்டில் தற்போது எந்தச் சமயங்கள் அரசியலில் செல்வாக்குச் செலுத்கிறது என்பதற்கு அப்பால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை கருணையோடு பராமரிக்கின்ற மனித நேயமே அவசிய தேவையாகவுள்ளது.

எனவே எல்லோரையும் தன்னவர் போல் போற்றுகின்ற சைவத் தமிழர்கள் இத் தைத் திருநாளில் ஏழைகளுக்கும் அநாதைகளுக்கும் உதவ முன்வருவதோடு நிரந்தர சமாதானம ஏற்படவும் இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

**நாவாந்துறை...**

தடுக்கும் வகையிலேயே ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக யாழ் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இதேவேளை நாவாந்துறையில் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 39பேர் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டனர்.

நாவாந்துறைப் பகுதியில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவத்தை கண்டித்த நீதிபதி தலா பத்தாயிரம் ரூபா சரீரப் பிணையில் அனைவருக்கும் பிணை அனுமதி வழங்கினார்.

அத்துடன் பிணையில் செல்லும் 39பேரும் வாரத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் யாழ்.பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை இச்சம்பவ சேதவிபரம் குறித்து அறிக்கையொன்றைத தயாரிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. (இ-6,77)

**பொஸ்னிய....**

பாதுகாப்புத்துறை அதிகாரிகளுடன் கருத்துப் பரிமாற்றம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முன்னாள் இந்திய இராணுவத் தளபதி சதீஸ நம்பியார் இந்த வாரம் இலங்கை வருவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)


எமது புதிய வீடியோ CD வெளியீடு
விக்ரம், ஜோதிகா, கிரான், விவேக் நடித்த
தூல்
அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய பொங்கல் வாழ்த்துகள்
I.T.N வீடியோ
பலாலி வீதி பரமேஸ்வராச் சந்தி
T.P. 222 3123


THE ROYAL COLLEGE OF JAFFNA
ஆண்டு 1ல இருந்து சகல பாடங்களுக்கு, தொடர்பு
தலைமை ஆசிரியர்
ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி
426(302) K.K.S Rd JAFFNA.
BLACK ROAD, CHANKANAI
(6459)

நாகம்ஸ் மற்றும் சக நிறுவனங்களின் பொங்கல் நல்வாழ்த்துகள்
நாகம்ஸ் சினிமா
பொங்கல் வெளியீடாக
பிரசாந் - சினேகா, நாசர் நடித்த
விரும்புகிறேன்
(புதிய வெளியீடு)
தினசரி - 11.00, 3.00 மணி
சனி, ஞாயிறு - 11.00, 3.00, 6.30
பொங்கல் தினத்தன்று விசேட காட்சிகள் 6.30, 9.30

(C/5650)

தேவை
கொழும்பில் உள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு நல்ல அனுபவமுள்ள லேத்மன் (LATHE MAN) தேவை
நேரில் உடன் வரவும்
செல்லாசன்ஸ்
118(198) கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம் (6452)

அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துகள
தேவை
கணக்கியல் அறிவும், மூன்றுமொழி அறிவும் (ஆங்கிலம், சிங்களம், தமிழ்) உடைய களஞ்சியப் பொறுப்பாளர் தேவை. 18.01.2003 நேரில் வரவும்.
தொடர்புகளுக்கு :-
(THE) த பெனின்சுலா குறூப்
127/10 கோயில் வீதி,
யாழ்ப்பாணம்
(C/5652)

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் பொங்கல் நல்வாழ்த்துகள்
யாழ்மண்ணில் மட்டுமல்ல வன்னியிலும் பெற்றுக் கொள்ளலாம்
கீஸ்ட் உணவுத் தயாரிப்பாளர்
அதிஉன்னத தரம், சுவை நீண்டகால தன்மை அடிப்படையில் இயற்கைப் பழங்களில் இருந்து தயாரிக்கப்படுகிறது.
உங்கள் வசதித் தன்மைக்கேற்ப நியாய விலையில், வேறுபட்ட நிறைகளில் பிளாஸ்ரிக் கப்களிலும், போத்தல்களிலும் எங்கும் கிடைக்கின்றது
எமது தயாரிப்புக்களானவை
* ஸ்ரோபரி ஜாம் * விளாம்பழ ஜாம் * அன்னாசி ஜாம் * பழக்கலவை ஜாம் * அன்னாசி கோடியல்
* பசன்புருட் கோடியல் * மிக்ஸ்புருட் கோடியல்


ஆரோக்கிய வாழ்வின் இயற்கைச் சுவை KIISST
உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவோர்:
KIISST FOOD MANUFACTURES. 55, OLD PARK ROAD, JAFFNA. SRILANKA.
பதிவு இல:- J/DS/PR687. யாழ்மண்ணின் உன்னத தயாரிப்பு KIISST
(C/5651)

மங்களம் பொங்கித் ததும்பிட மகிழ்ச்சி பொங்கி வழிந்திட
தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நன்னாளில்
எமது அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
ஆஸ்திரேலிய வைத்திய பரிசோதனை நிலையமான
ULTRA HEALTH CARE
தன்னுடைய சேவையை எமது மக்கள் நலன் கருதி
வடகிழக்கில் ஆங்கங்கே சேவைகளை வழங்குவதற்கு
பொருத்தமான இடவசதிகளை எதிர்பார்க்கின்றனர்
உடனடித் தொடர்புகளுக்கு: திரு. செல்லையா யோகேஸ்வரன்
-சிரேஷ்ட ஆலோசகர்-
ULTRA HEALTH CARE
740, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 222 3393
Mobile: 0777 434175
0777 244725
e-mail- ultraintl@hotmail.com
(C/5630)


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.01.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# தைப்பொங்கல் சிறப்புமலர்


# அபிராமி எலக்ரிக்கல்ஸ்


# ABIRAMY ELECTRICALS


## DEALERS IN ELECTRICAL GooDS


CLIPSAL


Switches & Sockets


Allied Accessories


Lighting


Conduits & Cables


RCD/MCB

AUTHORISED DISTRIBUTOR FOR CLIPSAL & ORANGE ELECTRICAL ASSESSORIES IN JAFFNA DISTRICT

அபிராமி எலக்ரிக்கல்ஸ் மின்சாரப் பொருட்கள் விற்பனையாளர்கள்
கிலிப்சால், ஒரேஞ் சுவிச் வகைகள், மின்சாரப் பொருட்களின்
யாழ் மாவட்ட ஏக விநியோகத்தர்கள்

T.P- 021-222-2489

62/34 STANLEY ROAD (NEAR THE JAFFNA POST OFFICE) [C/5635] JAFFNA

# PRAKASH TRANSPORT SERVICE

## General Merchants, Commission Agents & Rice Millers

பிரகாஷ் ரான்ஸ்போட் ஸ்தாபனத்தாரின்

புத்தாண்டு - பொங்கல் நல்வாழ்த்துக்கள்.




பிரகாஷ் சமாதான போக்குவரத்து பொதிகள், பரிமாற்று சேவையாளர்கள் தமது 33 வருட நம்பிக்கையான மக்கள் சேவையின் பூர்த்தியினை தெரிவிப்பதோடு தங்களையும் அதில் இணைத்துக் கொள்ளுமாறு அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுகின்றார்கள்.

A9 வீதியூடாகத் தலைநகரில் (கொழும்பு) இருந்து சகல விதமான பொருட்களை யாழ்ப்பாணத்திற்கும், யாழ்ப்பாணத்திலிருந்து விவசாய உள்ளூர் உற்பத்திப் பொருட்களை கொழும்புக்கும் கொண்டு சென்று உரியவர்களிடம் கையளிக்கப்படும்.

- ✳ களஞ்சியப்படுத்தும் வசதி
- ✳ பொருட்களுக்குப் பாதுகாப்பு உத்தரவாதம்
- ✳ நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளும் வசதி
- ✳ தினசரி துரிதசேவை
- ✳ குறைந்த கட்டணம்
- ✳ பொருட்கக்கு ஏற்படும் செலவுகளைச் சேவையின் பின்னர் பற்றுச்சீட்டுடன் அறவிடப்படும்.

# பிரகாஷ் ஏஜென்சி

பிறிமா (PRIMA) கோழித்தீன் உற்பத்தியாளர்களின்
யாழ் விநியோகஸ்தர்கள்

இல.221 டாம் வீதி,
கொழும்பு 12.
T.P.01-543310, 01387857
Fax: 338736

2003 ஆம் ஆண்டு சமாதானம்
மலர்ந்திட வாழ்த்துகிறோம்.

இல.457 கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.021-222-2145
Fax: 021-222- 2958.

# தைப்பொங்கல் சிறப்புமலர்


யாவருக்கும் எம் இதயம் நிறைந்த பொங்கல் நல் வாழ்த்துக்கள்

சுத்தமான முறையில் காலை, மதிய இரவு, உணவு வகைகள் பெற்றுக் கொள்வதற்கும் பொதி செய்யப்பட்ட உணவுகள் ...த்த நேரத்தில் எமது சேவை வாகனம் மூலம் ஓடருக்கும் பெற்றுக் கொள்வதற்கும் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

சுவிஸ்லாந்து

சக்தி சமூக நலன்புரி நிலையம்

நடத்தும்

## சக்தி உணவகம்



திருமண விழாக்கள், பிறந்தநாள் விழாக்கள், பூப்புனித விழாக்கள் எதுவானாலும் உங்கள் ஓடர்களுக்கு சிறந்த சேவை ஆற்ற காத்திருக்கிறார்கள்.

காங்கேசன்துறை வீதி, சுன்னாகம். T.P : 0777-715658

எமது சக்தி உணவகத்தின் வருமானம் முழுவதும் துயர்துடைப்புப் பணிக்கே

(C/5629)



அவனி எங்கும் அமைதி நிலவ யாவருக்கும் எம்மினிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்

* புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்கள்
* அவற்றிற்கான உதிரிப்பாகங்கள்
* பற்றறி வகைகள்
* அஸிட் வகைகள்

போன்றவற்றைப் பெற்றிடலாம்

பிரான்சியத் தொழில்நுட்ப முறையில் உருவானதும் ஜப்பானிய உதிரிப்பாகங்கள் பொருத்தக் கூடியதுமான டய்டோ (DAIDO) மோட்டார் சைக்கிள்களுக்கான ஏக விநியோகஸ்தர்



## பாலவிநாயகர் மோட்டோர்ஸ்

08,12, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C/5632)



உழவர் திருநாளாம் இத்திருநாளில் யாவருக்கும் எம் உள்ளம் நிறைந்த தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்



உங்களது அங்கங்களில் எங்களது தங்க நகைகள் மின்னிப் பிரகாசிக்க இன்றே வாருங்கள்


## விவேகா நகை மாடம்

131, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/5632)



அனைவரது உள்ளத்திலும் அமைதி நிலவிட எம் உளம் நிறைந்த பொங்கல் வாழ்த்துக்கள்



## எக்ஸ்போ ஏவியேஷன் கொழும்பு செல்கிறது

- யாழ்ப்பாணம் - பலாலி - யாழ்ப்பாணம் - இலவச் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து.
- வசதியான புறப்படும், சென்றடையும் நேரங்கள்.
- பலதரப்பட்ட பிரயாண வசதிகளுடன் தெரிவு மற்றும் சிக்கன வகுப்புகளுடன் இயங்கும் ஒரேஒரு உள்ளூர் விமான சேவை.
- சுமூகமான, அனுபவமுள்ள விமானப் பணியாளர்கள்
- யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் தொடங்குவதற்கு அங்கீகாரம் பெற்ற முதலாவது விமான சேவை
- வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் மாலை நேர விமான சேவையும் உண்டு.
- எமது விசுவாசத்தை மேலும் உறுதிப்படுத்த 'ரிவோட்ஸ் பிளஸ்' சலுகை.

இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை

ரூ 2.425/- ஒரு வழி

ஒதுக்கீடுகளுக்கும் கட்டணச் சீட்டுகளுக்கும்

எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவேட்) லிமிட்டட்

1E ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021-222 3891, 0777 - 730555, 0777 - 730666
464, காலி வீதி, கொழும்பு -3
தொ.பே: 074-512666 (3வரிசைகள்)
கொழும்பு விமான நிலையம் - இரத்மலானை 01-632889, 01-632890

(C/5628)

# தைப்பொங்கல் சிறப்புமலர்


எங்கும் மங்களம் பொங்க எம் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவர்க்கும் எம் இதயம் நிறைந்த பொங்கல் வாழ்த்துக்கள்

* துவிச்சக்கர வண்டிகள் அவற்றிற்கான உதிரிப்பாகங்கள் * T.V. வகைகள் * டெக் வகைகள் * அன்ரனா வகைகள் * றேடியோ வகைகள்

போன்றவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

**இ.ச. பேரம்பலம் சகநிறுவனம்**

50,52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.Phone : 021-222 2988
Fax : 021- 222 2368

(C/5601)



துன்பங்கள் நீங்கி இன்பங்கள் சூழ அனைவருக்கும் எம் இனிய தைப் பொங்கல் வாழ்த்துக்கள்

* பல சரக்குப் பொருட்கள் * பால் மா வகைகள * பிஸ்கட் வகைகள்

அனைத்தையும் நியாய விலையில் ஒரிடமாகப் பெற்றிட

180,(380),
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

**குகன் ஸ்ரோர்ஸ்**

T.Phone
021-222 2767

C/5602



அகிலமெங்கும் அமைதி நிலவ யாவருக்கும் தித்திக்கும் தேன் சொட்டும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்



தங்க நகையுலகில்
மங்காப்புகழ் பெற்ற
தங்க நகைகளின்
அரங்கம்

**விதுர்ஷிகா நகையகம்**

1/5, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/5608)



தம் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தமது பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றனர்.

நிருத்திகா ஜுவல்லறி ஸ்தாபனத்தினர்

அழகிய கலை நயம் மிக்க
அசல் 22 கரட்தங்க நகைகளை
உங்கள் எண்ணம் போல்
தெரிவு செய்திட



**நிருத்திகா ஜுவல்லர்ஸ்**


177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P : 021-222 2694


(C/5609)



துன்பங்கள் நீங்கி இன்பங்கள் சூழ அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் யாவருக்கும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்



* புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்களா?
* மோட்டார் வாகனங்களா?
* அவற்றிற்கான உதிரிப்பாகங்களா?
* பற்றறி வகைகளா?



அனைத்தையும் நிதான விலையில் ஓரிடமாகப் பெற்றுக் கொள்ள

**அருள் விநாயகர் ரேடர்ஸ்**

106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

**அருள் விநாயகர் மோட்டோர்ஸ்**

108, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(C/5607)

# தைப்பொங்கல் சிறப்புமலர்


துன்பங்கள் நீங்கி துயரங்கள் பறந்தோட
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் யாவருக்கும
இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!

❖ நாளுக்கு நாள் மாறும் நவ நாகரிக தங்க நகைகளுக்கு
❖ நங்கையர் விரும்பும் நவீன டிசைன் தங்க நகைகளுக்கு
❖ அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு



## உதய கதிரவன் நகை மாடம்

172, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## கதிரவன் ஜெம்ஸ் சென்ரர்

213, கஸ்தூரியார் வீதி, [C/5612] யாழ்ப்பாணம்.

அனைவர் வாழ்விலும் மகிழ்சி பொங்க எம்
இதயம் நிறைந்த தைத்திருநாள் வாழ்த்துக்கள்.

திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ், சஞ்சிகைகள், நினைவு மலர்கள், வாழ்த்து மடல்கள், பற்றுச் சிட்டைகள் அனைத்தையும் பல வர்ணத்தில் ஓவ்செற் பிறிண்டிங் செய்து கொள்ளவும்
அச்சகங்களுக்குத் தேவையான
பல வர்ண அட்டைப் படங்களுக்கும்
நீங்கள்
நாட வேண்டிய இடம்



## கங்கை பிறிண்டேர்ஸ்



நாவலர் வீதி, [C/5617] யாழ்ப்பாணம்.

எமது வாடிக்கையாளர்களுக்கு!
கொமர்ஷல் வங்கியினரின் தைப்பொங்கல் வாழ்த்துக்கள்



இலங்கையில் உள்ள எமது அனைத்துக் கிளைகளினதும் கொடுக்கல் வாங்கல்களை ஒரே கிளையில் மேற்கொள்ள இன்றே யாழ் கிளையின் வாடிக்கையாளராகுங்கள். எமது தன்னியக்க இயந்திரம் (ATM) மூலம் உங்கள் நடைமுறை சேமிப்புக் கணக்குகளை 24 மணி நேரமும் செயற்படுத்த முடியும்




## கொமர்ஷல் வங்கி

உங்கள் ஆதாயமே எங்கள் நோக்கம்

ஓம் விரட் விஸ்வப் பிரம்மனே நமக
தைப்பொங்கல் வாழ்த்துக்கள்



## பிறேம் நகை மாடம்

தைப்பொங்கலை முன்னிட்டு எமது வாடிக்கையாளர்கள் நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் R.பிறேம்குமார் அவர்களும் அங்கு பணிபுரியும் ஊழியர்களும் பெருமகிழ்ச்சி அடைகிறார்கள்.


R.பிறேம்குமார்,
தேவாலய வீதி,
சுழிபுரம்.

யாழ் வீதி,
மானிப்பாய். [C/5622]

எமது அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

- சேர்ட் வகைகள் ◌ சேட்டிங் சூட்டிங் வகைகள
- T-சேர்ட் வகைகள் ◌ சாறிவகைகள்
- அழகுசாதனப் பொருட்கள் ◌ பேபி சூட்
- றெடிமேட் ஸ்கேட் அன்பிளவுஸ்
- அன்பளிப்புப் பொருட்கள்

இவை அனைத்தையும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய கைராசியான ஸ்தாபனம்



## நந்தா
### புடவையகம் அன் பான்சி ஹவுஸ்


யாழ் வீதி (இலங்கை வங்கி முன்பாக), மானிப்பாய் [C/5621]

## சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்

எமது அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வர்த்தகப் பெருமக்கள் யாவருக்கும் எமது



இனிய பொங்கல் வாழ்த்துக்கள்




## சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்

[C/5625]



# பொங்கலில் பொங்கிய கவிதைகள்



## பணிகுவம் பொங்கல் நாளில்



சென்னிற உதிரம் தன்னை
சிந்திடும் வியர்வை யாக்கி,
நெல்மணி விளைவிற்காக
நீரெனப் பாச்சி நிற்பாய்,
உன்னையே உரம தாக்கி,
உலகினுக் குணவை யூட்டும்,
அன்னையாம் உழவ, நீயே
அவனியின் ஆணியாவாய்!



வைகறை எழுந் துழைத்து,
மைம்மலில் வீடுசேர்வாய்,
வெய்யிலும் மழையும் உன்தன்
மேனியில் தாங்கி நிற்பாய்,
கைகளும்காலும் தான் நீ
கண்டதோர் மிச்ச மன்றி,
உய்ந்நிலை உனக்கெந் நாளோ,
உழவர்க்கு உயர்வு என்றோ?



ஏராளன் பின்னே செல்லும்
இவ்வுல கென்ற பண்டை
நூலோர்கள் சொல்லிவைத்த
நுண்ணிய மொழியைப் போற்றி,
காராளர்வாழ்வு நாளை
மேலோங்க வேண்டி வெய்யோன்,
பாதார விந்தம் தன்னை
பணிதவம் பொங்கல் நாளில்.

*வே.இளையகுட்டி.*
*புத்தூர்.*

## விடி வெள்ளியாய் வா !

தைமகளே பாரில் நாம் பட்ட
பாடுகள் போதும்
உண்ண உணவின்றி
ஒரு வேளை உறக்கமின்றி
மண்ணில் கழித்திட்ட வாழ்வது போதும்
ஈழமண்ணிற்காய் உயிரினை நீத்திட்ட
உறவுகள் போதும்
சொந்த மண் தனைத் துறந்து
செகமெலாம் பரந்து வாழும்
அகதி வாழ்வு போதும் போதும்
புதைகுழி மிதி வெடி அதுவும் போதும்
பகையினால் கிழிக்கப்பட்ட பெண்மை போதும்
சுடு காடாய் காட்சி தரும்......
தேசம் போதும்.
தைமகளே! இது வரை நாம்பட்ட
இன்னல்கள் போதும்.
இனி உன் நல்வரவால்
இதயங்கள் மகிழ்ந்திட வேண்டும்.
விடி வெள்ளியாய் நீ வந்திட வேண்டும்

*கி. அ. தில்லைதாசன்.*

## இன்புடனே பொங்கலிடு இன்று!

வாசலிலே கோலமிட்டு வண்ணவிளக் கேற்றிவைத்து
நாசமெல்லாம் தீர்ந்தெங்கள் அன்னைதமிழ்- தேசமது
நன்கே வளர்கவென நல்லடுப்பில் பானைவைத்து
இன்பமுடனே பொங்கலிடு இன்று

*நா.நவராஜ்*



## தையவள் வருகிறாள்!

புதிய தாய் வருகின்றாள்
புதுயுகம் படைத்திடவே
புதுவாழ்வு மலர்ந்திடவே
பூரிப்பாய் வருகின்றாள்!

*கே.நாகமணி*
*மகேந்திரலிங்கம்*

## வேற்றுமைகள் வேண்டாமென இன்று பொங்கிடுவோம்

இனிய பொங்கள் திரு நாளில்
இன்பமுடனே நாம் வாழ
இனமொன்றே எனக் கருதி
இன்று கூடிப் பொங்கிடுவோம்.



தேன் விடுத்தே நஞ்சுண்டோம்
பிரிவினைக்கே இரையானோம்
வேண்டாத வேற்றுமைகள் இனி
வேண்டாமென இன்று பொங்கிடுவோம்

பன்மையிடை ஒருமையினை
பண்புடன் காணும் சமாதானம்
உண்மையாய் மலர வேண்டுமென
உவப்புடன் இன்று பொங்கிடுவோம்.

*சமூக ஜோதி*
*கா.கணேசதாசன்*

## நிரந்திர அமைதிதரப் பொங்கிடு பாலே!

களமதனை உழுதுபயிர் செய்திடவே உறுதுணையாம்
கதிருக்கு நன்றியதாய்ப் பொங்கிப் படைத்துத் தன்
உளம் நிறைய உழவன் வணங்குகின்ற திருநாளாம்!
உலகினுக்கு உணவளிக்கும் உன்னதப்பணிசெய்வோன்
வளமுடைய வாழ்வதனைப் பெற்று மகிழ்வடைந்திடவும்
வையத்தில் மக்களெல்லாம் நிரந்தரமாய் அமைதியது
விளங்கிடவே நிறைவுமிக வாழுகின்ற நிலைபெறவும்
வெய்யோனைப் போற்றி நாம் வணங்குதல் செய்திடுவோம்!

*நாயன்மார்கட்டு*
*ப.மகேந்திரதாசன்*

## கரம் கூப்பி அழைக்கிறோம்..

இன வெறியை ஒதுக்கிவிட்டு
ஜனவரி என்ற பெயரோடு
மதவெறி பிடித்தவர்களும்
பல ஒளி தரும் பகவானை
வணங்க வைக்கும் தைமகளே!
மங்கள குங்குமமும்
மார்பில் கச்சையும்
ஏறும் நன் நாளாம்
மனங்களிலே ரணங்கள் ஒழிய
அஸ்தமனங்கள் பறந்தோட
கன்னி மகளே! - உன்னை
கரம் கூப்பி அழைக்கிறோம்.

*கவி. உமா*
*சண்டிலிப்பாய்*

## அகங்குளிர பொங்கிடுவோம்!

கல்லெனவேஇருந்தகால நெஞ்சத்தைக் கனியவைத்து
காசினியில் புதுமாற்றம் வந்திருக்கும் வேளையில்...
அல்லல்கள் தீர்ந்துபோய் அன்னைமண் இன்பத்தில்....
இருக்கின்ற காலத்தில் இனிமையுடன் உதித்திருக்கும்
நல்லதோர் புத்தாண்டில் நலங்கண்டு எங்களினம்
நிம்மதியாய்.... வாழ்வதற்குநீங்காத அமைதியினை
அள்ளியெமக் குவர்ந்தளித்து ஆனந்தம் கண்டுவாழ
அரிய தை மகளேவா! அகங்குளிரப்பொங்கிடுவோம்!

*சு.க.சிந்துதாசன்*
*பொலிகையூர்.*

## கீற்றுக்கள் சலசலத்திட.....!



மனங்களுக்குள்கட்டிவைத்த
துன்ப முடிச்சு அவிழ்ந்து
முகங்களுக்குள் புதைந்த
முகாரிகள் அழிந்து
வேதனையில் வெந்திட்ட
நெஞ்சங்கள் உவகையில்
மலர்ந்து.....
மௌனத்துள் உறைந்த
மனங்கள் மகிழ்ச்சியில்
சிலிர்த்து...... யுத்தத்தின்
முகவரி தொலைந்து
சுபீச்சத்தின் கீற்றுக்கள்
சலசலத்திட......
சூரியப் பொங்கலே.....!
சுதந்திர தீர்வைத்தருவாயா ....?

*க. ஆனந்தன்*
*யாழ்.பல்கலைக்கழகம்*



## நன்றித்திருநாள் தைப்பொங்கல் பெருநாள்

வானில் கதிரவன் ஒளிர்வதனால்
வயலில் பயிரும் விளைகின்றது.
உலகம் என்றும் வாழ்வதற்கே
உணவுப் பொருளும் கிடைக்கின்றது.
வயல்கள் நன்றே விளைவதற்கும்
துயரமின்றி நாம் வாழ்வதற்கும்
பசு மாடும் எருதும் துணையாகும்
பாரில் இதனை மறப்போமா?
நன்றித்திருநாள் தைத்திருநாள்
நலம் நாடிக் கொழிக்கும் நன்நாளே
குன்றிக்கிடக்கும் எம்மக்களையே
குதூகலம்கொள்ள வைக்கும் நாள்
தைப்பொங்கல் நாள்தரணியிலே
தமிழர் தன்மானம் காக்கும் நன்நாளே
தனிச்சிறப்புடைய இப்பொருநாளை
தமிழர் வாழ்விடமெங்கும் கொண்டாடுவோம்.

*நீர்வை மணி*



## இனிய தைப்பொங்கல்



வான் முகட்டில் தீபம்
வரைந்தவர் யாரோ
வைகறைப் பொழுதைக் கலை
வடித்தவர் யாரோ
எங்களின் தேசம் எங்கும்
எத்தனை மாற்றம்
எத்தனை காலம் காத்திருந்தோம்
இனிய தைப் பொங்கல் பார்த்திருக்க

*ஜெயம்*
*யாழ் வைத்தீஸ்வராக்கல்லூரி*

## நம்பிக்கை !

பசியால் கொட்டா விட்ட
குலம் ஒன்று கூடி
பட்டாசு சுட்டு
பகல் வானம் விட்டு
பாற்பொங்கல் பொங்கி
படைத்திடக் கண்டு
செட்டாக வந்து
சிரிக்குந் தை அரசே!
முட்டாள்கள் ஆகி
முயற்சிகள் இன்றி
முளிக்கின்ற போதும்
இனிக்குமோர் நினைவில்
வைத்த நம்பிக்கை
வழிகாட்ட இன்னும்
வருடங்கள் தோறும்
வருகின்றாய் வாழி!

*தில்லைச் சிவன்*




அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
தித்திக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்கள்

**துணிஸ் ரெக்ஸ்**




❋ ஆண், பெண் சிறுவர்களுக்கான றெடிமேட் ஆடைகள்
❋ சல்வார் கமிஸ் ❋ சுபமுகூர்த்தப் பட்டுப் புடவைகள்
❋ ஸ்கேட் அன் பிளவுஸ் ❋ சேர்ட்வகைகள்
❋ T–சேர்ட் வகைகள்

இன்னும் பலரக புடவைத் தினுசுகளை மலிவு விலையில் பெற்றுக் கொள்ள நீங்கள்

நாடவேண்டிய இடம்

**துணிஸ் ரெக்ஸ்**

நவாலி றோட்,
ஆனைக்கோட்டை.

T.P - 2222955

[C/5637]

# தைப்பொங்கல் சிறப்புமலர்

அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்

## வான்வழிப்பயணமா?
## தரை வழிப்பயணமா?

பல வருட காலமாக யாழ். - கொழும்பு பஸ் சேவைகளுக்கான ஆசனப்பதிவுகளை மேற்கொண்டு வரும் ஆர்.பி.(B) பஸ் ஆசனப் பதிவகத்தார் யாழ்.மக்களுக்கு கிறிஸ்மஸ் தினத்திலிருந்து துரித கதியில் பிரயாணம் செய்வதற்கு தரைவழி, வான்வழிக்கான டிக்கெட்டுக்கள், சொகுசு பஸ், மற்றும் வான் ஆகியவற்றின் ஆசனப் பதிவுகளை ஒரே இடத்தில் பதிவுசெய்யவுள்ளார்கள். ஆகவே உங்கள் பயணடிக்கெட்டுக்களை ஒரே இடத்தில் பதிவுசெய்து கொள்ள,

(C/5645)

வைரவர் கோவில் அருகில்,
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
T.P. 0777 737368

**ஆர்.பி.(B) பஸ் ஆசனப் பதிவகம்**
**15, பெரியகடை**
**(மரக்கறி மார்க்கெட் அருகில்),**
**யாழ்ப்பாணம்.**

---

அனைவர் வாழ்விலும் மகிழ்ச்சி பொங்க எம் உளம் நிறைந்த பொங்கல் வாழ்த்துக்கள்

## விண்மீன் அங்காடி

**''கந்தவனம் பில்டிங''**
**நெல்லியடி**


*கிருமிநாசினி வகைகள்
*உரவகைகள்
*தெளி கருவிகள்
*வீடுகளுக்கான வர்ண மாபிள் வகைகள்
போன்றவற்றிற்கு நாடுங்கள்

(C/5646)

---

எல்லோருக்கும் எம்மினிய பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

யாழ் நகரில் கணனி மூலம் நவீன முறையில் பல வர்ணத்தில் ஓவ் செற் பிறிண்டிங் செய்து கொள்ள நாடுங்கள்.



## SIVAKI PRINTERS

**பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி,**
**திருநெல்வேலி.**

(C/5647)

---

## பொங்கல் வாழ்த்து

தமிழர் திருநாளாம் ''தைப்பொங்கல்'' தினம்
இனிது வரவேற்பதெம் கடனே!
மனிதராய் நாம் வாழ்ந்திடவே
கனிவான வரம் கேட்போம்!
பனியது போல் துயர் தளைய
வந்திடுவாய் பொங்கல் திருநாளே!

அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
உளம் கனிந்த ''பொங்கல் வாழ்த்துக்கள்''
உரித்தாகுக!

''உள்ளூர் உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் நல்
நோக்கில் வலிகாமம் வடிசாலையின்
உற்பத்திகளுக்கு ஆதரவளிக்க தைப்பொங்கல்
திருநாளில் உறுதி கொள்வீர்''

மானிப்பாய்

தலைவர், பணிப்பாளர், பணியாளர்கள்,
வலிகாமம் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்
கொத்தணி(மட்டு)

(C/5644)

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது தைத்திருநாள்
வாழ்த்துக்கள்



## ஜுவல்லரி நிதுஸ்

(நகைத் தொழில் நகைவியாபாரம்)

**உன்னத கலை நயம் மிக்க நகைகளை உங்கள் எழில் மிகு தேகத்திற்கேற்ப அதி நவீன மோஸ்தர்களில் தரம் குன்றாத் தங்கப் பவுண் நகைகளைச் செய்து பெற்றிட வாரீர்**

பிரதான வீதி, மானிப்பாய்

(C/5643)

---

யாவருக்கும் எமது தைத்திருநாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்



**தங்க நகையுலகில் மங்காப் புகழ் பெற்ற தங்க ஆபரணங்களின்**
**காட்சிக் கூடம்**

# வீ.எம்.கே. ஜுவலர்ஸ்

305, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
தொலைபேசி :- 070 - 212989, 070 - 212963



(C/5642)

---

யாவருக்கும்
எமது இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
ஹற்றன் நஷனல்

## அடகு வைக்கும் வசதி

வாரத்தில் ஆறு நாட்கள்
சனிக்கிழமை உட்பட



ஒரு பவுணுக்கு ரூ. 6325/- அடகுப்பணம்!
மாதாந்த வட்டி1.8% மட்டுமே!


மேலதிக விபரங்களுக்கு HNB யாழ்ப்பாணக் கிளையை நாடுங்கள்

ஹற்றன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி
யாழ்ப்பாணக் கிளை
இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதி,
தொலை பேசி: 021-2222787,021-2223463
தொலை நகல்: 021-2223194

[C/5501]

# தைப்பொங்கல் சிறப்புமலர்


மலர்ந்துள்ள சமாதானம் என்றும் நிலைபெறவேண்டி எம் அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள் யாவருக்கும் எம் உள்ளம் நிறைந்த தைத்திருநாள் வாழ்த்துக்கள்



* கொம்பியூட்டர்கள்
* T.V வகைகள்
* டெக் வகைகள்
* அவற்றிற்கான உதிரிப்பாகங்கள்

மற்றும் சகல விதமான மின் உபகரணங்களுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம்

**ஸ்கை எலக்ரோனிக் சிஸ்ரம்**

இல. 01C, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.Phone : 021-222 3408

யாவருக்கும் எம் இதயம் நிறைந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்

நங்கையர் விரும்பும் நவீன டிசைன் தங்க நகைகளை அசல் 22 கரட்டில் நம்பிக்கையுடன் பெற்றுக் கொள்ள



**விஷ்ணு ஜுவல்லறி**

181, கஸ்தூரியார் வீதி, (C/5604) யாழ்ப்பாணம்.

அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் எம்மினிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான, சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கு



**லிங்கன் கிறீம் ஹவுஸ்**

119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/5603)

**பிரசாத் நகை அகம்**

உழவர் திருநாளாம் இத்திருநாளில் எம் அன்புக்குரிய அன்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் யாவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்.



மென்மைக்கு மெருகேற்றும் இளமைக்கு எழிலூட்டும் அசல் 22 கரட் தங்க நகைளுக்கு

**பிரசாத் நகை அகம்**

177GN. கஸ்தூரியார் வீதி, (C/5611) யாழ்ப்பாணம்.

**சிறிகருமாரி நகையகம்**

அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எம் இதயம் நிறைந்த தைப் பொங்கல் வாழ்த்துக்கள்

**சிறிகருமாரி நகையகம்**

தங்கத்தின் தரம் நிரந்தரம் அத்தரத்தை நிர்ணயிக்க




சிறி கருமாரி நகையகம்

177D, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/5610)

அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எம் இதயம் கனிந்த தைத்திருநாள் வாழ்த்துக்கள்.

கட்டடப் பொருள் விற்பனையில் யாழ். நகரில் முன்னோடியாகத் திகழ்பவர்கள்

**கஜமுகன் ஹாட்வெயர்ஸ்**



CALTEX 27 ஒயிலுக்கான வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்.

**கஜமுகன் ஹாட்வெயர்ஸ்**

147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/5605) T.Phone :021-222 2835

# தைப்பொங்கல் சிறப்புமலர்


உழவர் திருநாளில் எங்கள் உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்

AIR LINE
Jaffna Special Feel The Differences

**SERENDIB**

13, Power House Road,
Jaffna.
T.P : 021-2223916
0777 - 801038, 0777 - 517019

விமான சேவை



(C/5636)



பொங்கலோ பொங்கல்! வாருங்கள், வாழ்த்துக்கள்!
வடமாகாண மக்களிடம் பல்வேறு கட்டிட, பொறியியல் துறைகளில் நீண்டகால அபிமானத்தைபெற்ற

**சாமுவல்சன்ஸ் & கம்பனி லிமிட்டெட்**

✲ வடமானிலத்தை மீளக் கட்டியமைப்பதில் ✲ இளைஞர்களைப் பொறியியல்துறையில் பயிற்றுவிப்பதில்
✲ மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்துவதில்

புதிய சக்தியுடனும், வளத்துடனும் எம்மை முழுமையாக அர்ப்பணித்து, பணிகளை விரிவுபடுத்துகின்றோம்

சாமுவல் சன்ஸ் அன் கம்பனி லிமிட்டெட் (Samuel Sons & Co.LTd) (கட்டிட நிர்மாண சேவைகள், ஆலோசனை பிரிவு)
ஹியுமன் டயக்னஸ்ரிக் லிமிட்டெட் (Human Diagnostics (PTE) LTD
ஹெல்த்கெம் லிமிட்டெட் Healthchem Origins (PTE)LTD

ஆகிய நிறுவனங்களின் மங்களகரமான ஆரம்பவிழா தமிழர்தம் தைப்பொங்கல் திருநாளன்று (15.01.2003) பகல் 11.30 மணிக்கு யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி 412,414ஆம் இலக்ககட்டடத்தில் நடைபெறவுள்ளது

(C/5639)



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

மங்கையர் மயங்கும் ஜவுளிகளின் எழில் மிகு காட்சியகம்



**மங்கை சில்க்ஸ்**
*Mangai Silks*

இல. 8 நவீன சந்தை, சுன்னாகம், (C/3640)



அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

Disiributors For:
✲ Hari Marketing Enterprises (Pvt) LTD
✲ J.L. Morison Son & Jones (Ceylon) LTD
✲ M.S.J.I (Ceylon) LTD
✲ Renal Care (PVT) LTD

ஏக விநியோகத்தர்கள்

**The Peninsula Group**

127/10 Temple Road, Jaffna. (C/3641)



எமது வாடிக்கையாளர்கட்கு யாழ் பிரதேச மக்கள் வங்கியினரின் தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள், உரித்தாகுக,

அதியுயர்வட்டி, அதிர்ஸ்டச் சீட்டிழுப்பு, அதிநவீன தொழில்நுட்பவசதிகள் தன்னிகரற்ற சேவை அதிநம்பகத்தன்மை, அந்தரங்கத்தன்மைப்பாதுகாப்பு ஆயுட்காப்புறுதித்திட்டம், வைத்திய வசதிக் கொடுப்பனவு இன்னும் இன்னோரன்ன வரப்பிரசாதங்களுக்கு மக்கள் வங்கியை நாடிடுவீர் இடம்பெயர்ந்தோரின் நன்மை கருதி அடைவு வைத்தோருக்கான நகைகள் மீளும் விசேட வசதி 31.01.2003 வரை, கடைசிச் சந்தர்ப்பமாக நீடிக்கப்பட்டுள்ளது.




யாழ் பிரதேச முகாமையாளர்.

**மக்கள் வங்கி**

(C/5638)

# தைப்பொங்கல் சிறப்புமலர்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம


தமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தித்திக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறார்கள்.

நங்கையர் விரும்பும் நவீன டிசைன் தங்க நகைகளை அசல் 22 கரட்டில் செய்து பெற்றுக் கொள்ள தரம் நாடுவோர் தவறாமல் நாடும் இடம்


## நியூ கார்த்திகா நகைமாடம்



இல.06, மகாராஜா கட்டிடம், [C/5623] சுன்னாகம் சந்தி, சுன்னாகம்.



தமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தைப்பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறார்கள்.



## தயாளன்

எமது சேவைகள் வீடியோ அன் கொமினிக்கேசன்

T.P.No- 222 3476
- 222 3429

※ பழைய புதிய CD வீடியோ பிரதிகள் வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம். ※ பக்ஸ் ※ நேரடித் தொலைத் தொடர்பு சேவை ※ இன்ரநெற் தொலைத் தொடர்பு சேவை ※ லெமினேஷன் (கவரிடுதல்) ※ தரமான போட்டோ பிரதிகள் ※ கதிரைகள் எம்மிடம் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம் ※ யாழ்-கொழும்பு பிரயாண ஒழுங்குகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ் வீதி [C/5624] மானிப்பாய்.

எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்.

## சிவம் ரெக்ஸ்ரைல்ஸ்

ஆண், பெண், சிறுவர்களுக்கான ஆடைகள் மற்றும் அனைத்து ஆடை வகைகளையும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்

கே.கே.எஸ் வீதி, கோண்டாவில் மேற்கு [C/5627] இணுவில்.

மலர்ந்துள்ள சமாதானம் என்றும் நிலைபெற வேண்டி யாவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்.



❄ உறுதியான பற்களைக் கட்டிக் கொள்ள
❄ மிதந்த பற்களுக்குக் கிளிப் போட்டுக் கொள்ள
❄ கண் பரிசோதித்துக் கண்ணாடி பெற்றுக் கொள்ள

நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்



## றெனி பல்மூக்கு கண்ணாடி அகம்

288, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்


[C/5626] T.P. 222 3703

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நாட்டில் என்றும் சாந்தியும் சமாதானமும் நிலைக்க வேண்டி எம் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் யாவருக்கும்



## இனிய பொங்கல் வாழ்த்துக்கள்



- ✪ நுகர்ச்சிச்சேவை
- ✪ கட்டட ஒப்பந்த வேலை
- ✪ தொலைத் தொடர்புச் சேவை
- ✪ கிராமிய வங்கி சேவை
- ✪ மீள் புனரமைப்பு சேவை
- ✪ கூட்டுறவு கல்வி அபிவிருத்தி



- ✪ சிற்றுண்டிச் சாலை
- ✪ நிழற்பிரதி சேவை
- ✪ புடைவை நிலையம்
- ✪ இரும்பு நிலையம்
- ✪ சுய தொழில் கடன்
- ✪ விவசாய சேவை

அனைத்தையும் வழங்கி வருகிறது.

# தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்

[C/5631]

# தைப்பொங்கல் சிறப்புமலர்

தமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் உளம் நிறைந்த தைத்திருநாள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர்.

## சுந்தர்சன் ஸ்தாபனத்தினர்

SUNDHARSON

- மின்சார உபகரணங்கள்
- P.V.C, அன்ரன் நீர்க்குழாய்கள் அதற்கான இணைப்புகள்
- மின் அலங்காரப் பொருட்கள்
- சகல வாகனங்களுக்குமான EXIDE பற்றரிகள்
- குளிர்சாதனப் பெட்டிகள் வாசிங் மெஷின்கள்
- L.G, தயாரிப்புகள் யாவும்
- சமையல் வாயு சிலிண்டர்கள் அதற்கான வாயு அடுப்புகள் இணைப்புகள்
- P.VC பலி வகைகள் அதற்கான இணைப்புகள்
- P.V.C நீர்த்தாங்கிகள்

இன்னும் பலவகையான மின்சாரத்தில் இயங்கும் பொருள்களையும்,
ஒரே, இடத்தில் நிதானம், நியாயம், உத்தரவாதத்துடன் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரே ஸ்தாபனம்

தொ.பே.இல 021-2222751
தொலை நகல் 021-2222751

## சுந்தர்சன்

மத்திய சந்தை முன்பாக,
பிரதான வீதி,
மானிப்பாய். [C/5613]

---

அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்கள்

## சிவதர்ஷன்

[C/5615]

- ✡ மின்சார உபகரணங்கள்
- ✡ எஸ்.லோன் பைப்புகள்
- ✡ மிதி வண்டிகள் அவற்றிக்கான உதிரிப்பாகங்கள்

விற்பனையில் முன்னோடியாகத் திகழ்பவர்கள்



## சிவதர்ஷன்

394, மணிக்கூட்டு வீதி, தொலைபேசி, 021-2222417 யாழ்ப்பாணம்

---

சாந்தியும் சமாதானமும் என்றும் நாட்டில் நிலை பெற வேண்டி
எம் அன்புக்குரிய வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
அனைவர்க்கும் பொங்கல் வாழ்த்துக்கள்.

- ☞ உங்கள் கண்களைப் பரிசோதித்து அழகு நிறைந்த கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும்
- ☞ முகப் பொலிவிற்கேற்ப சங்குப் பற்களைக் கட்டிக் கொள்ளவும்
- ☞ மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ளவும் நீங்கள் நாட வேண்டிய இடம்



## எரிக் கணேஸ்

[C/5616]

564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

எல்லோருக்கும் எம் இதய பூர்வமான தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்

## GREEN PARK

யாழ் நகரில் வியத்தகு பூங்கா
மங்கள நிகழ்வுகளை எழில்மிகு வியத்தகு இயற்கை காட்சிகளுடன் இணைத்துக் கொள்ளுங்கள். சிறுவர் முதல் பெரியோர்வரை மனதை வியக்க வைக்கும் குளிர்ச்சியான பூங்கா

## GREEN PARK

எமது சீதோஷ்ணத்திற்கு உகந்ததான கண்கவரும் பூங்கன்றுகள் அதி நவீன பூச்சாடிகள் விற்பனைக்கு உள்ளன.

## GREEN PARK

152/2, TEMPLE ROAD, (I.C.R.க்கு அண்மையில்) [C/5618] JAFFNA

---

## ஈஸ்வரி மரக்காலை

எங்கும் மங்களம் பொங்க அன்பர்கள்
நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

## பொங்கல் வாழ்த்துக்கள்

உங்களுக்குத் தேவையான தளபாடங்களை அதி நவீன தொழில் நுட்பத்துடனும் உறுதியுடனும் செய்து பெற்றுக் கொள்ள

## ஈஸ்வரி மரக்காலை அன் தொழிலகம்

பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்தி, [C/5619] யாழ்ப்பாணம்.